Registered as a news paper. நூலகம் யாழ்ப்பாணம் பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 29 (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :289



மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.545, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.06.2004 தொடக்கம் இயங்கிவருகிறது.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)


## மட்டு - அம்பாறை எம்.பிக்களுடன் புலிகள் நேற்று சந்தித்துப் பேச்சு!

இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள், மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்ப் பற்றாளர்களை -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், திட்டமிடல் செயலகத்தின் பணிப்பாளர் கு.தூயவன், பொருளாதார அபிவிருத்தி ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



## சமாதான முயற்சிகள் குறித்து ஆராய

# நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் கொழும்புக்கு வருகிறார்!

(கொழும்பு)

**நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் அடுத்த வாரம், மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்து சமாதான முயற்சிகள் குறித்த கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது.**

இடைநிறுத்தப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் குறித்து கலந்துரையாடுவதற்கே விதார் ஹெல்கிசன் இலங்கை வரவுள்ளதாக நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது.

இவ்விஜயத்தின்போது- தற்போது கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்தத்தைத் தொடரவேண்டிய அவசியம் குறித்தும் விதார் ஹெல்கிசன் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்கும் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விஜயத்தின்போது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பாரா என்பது குறித்து இதுவரை எதுவித செய்திகளும் வெளியாகவில்லை.

## மட்டு. நிலவரம் குறித்து

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜயந்த தனபால விளக்குவார்!

(மட்டக்களப்பு)

சமாதான செயலக செயலாளர் ஜயந்த தனபால தனது மட்டக்களப்பு விஜயம் தொடர்பாக நாளை மறுதினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து விளக்கம் அளிக்கவுள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் அங்கு போர்நிறுத்த உடன்பாட்டை உறுதி செய்வதற்கான ஏதுநிலைகள் குறித்து பல்தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இதன்பின்னர் கருத்துரைத்த அவர், மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்புற நேற்று ஆரம்பமாகியுள்ள இளையோர் உதைபந்தாட்ட போட்டி!

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் மேஜர் முரளி நினைவான 2 ஆவது தமிழீழத் தேசிய இளையோர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்றுக்காலை 9 மணியளவில் கோலாகலமாகத் தொடங்கியது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம், கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானம் ஆகிய இரு மைதானங்களில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் தமிழர் தாயகத்தின் அணிகளோடு கடந்த வருடத்தைப் போலவே சுவிஸ் நாட்டிலிருந்து வருகைதந்திருந்த அணியும் கலந்து கொண்டது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பா (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை விவகாரத்தில் இந்தியாவை தலையிட வைக்க அரசாங்கம் முயற்சி

## இதற்கே பிரதமர் புதுடெல்கி பயணம்

(கொழும்பு)

புலிகளுடனான சமாதானப் பேசசுக்களை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் அரசியல் நிலைப்பாட்டுக்கு ஆதரவைத் தேடுவது தொடர்பாக இந்தியாவின் ஒத்துழைப்பை இலங்கை அரசு நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு நேற்று இரவு 7 மணிக்கு புறப்பட்டுச் சென்றார். இவருடன் விவசாயத்துறை அமைச்சர் அனுரா திஸநாயக்கவும் பயணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மஹிநத ராஜபக்ஷ தலைமையில் செல்லும் இந்தக் குழுவினர் இன்று காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை சந்திக்கவுள்ளனர். இந்தியப் பிரதமர் மற்றும் இந்திய உயர் அரசியல் தலைவர்களையும் இவர்கள் நாளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது இ.தொ.காவின் ஆதரவு கிடைக்கும்!

### டி.எம்.ஜெயரத்தின நம்பிக்கை

எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது தொண்டமான் உட்பட இலங்கைத்தொழிலாளர் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அரசாங்கத்திற்கு கிடைக்குமென பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் தபால் தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சருமான டி.எம்.ஜெயரத்தின தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அமைச்சர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது

மாகாணசபையின் அதிகாரம் இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்துள்ளமையால் எதிர்காலத்தில் மத்திய அரசுடன் இணைந்து மாகாண சபைகள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்.

ஐக்கிய தேசியக்கட்சி கூறுவது (12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி தலைவரை ஜனாதிபதி சந்திப்பார்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக - அரசியற் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கருத்தறியும் ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டத்தின் ஒரு கட்டமாக -

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த வாரம் சந்தித்துப் பேசவுள்ளார்.

அரசியற் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் சந்திப்புக்கான கடிதங்கள் அடுத்த வாரத்துக்குள் அனுப்பப்படவுள்ளது.


எக்ஸ்போஎயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

## சிறுவிளம்பரம்

**A/L பௌதிகவியல் வகுப்பு**

பல வருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல் இணைந்தகணிதம் ஏராளமான பயிற்சிகளுடன், 20 வருட வினாத் தாள் உட்பட கற்பிக்கப்படுகிறது. மிகக்குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். சந்திப்பு தினசரி 3 மணிக்குப் பின். R.பாலசுப்பிரமணியம், B.Sc (Cey) Dip in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (786)

**உலக சமாதானம் வேண்டி வெள்ளிக் கிழமைகள் தோறும் பிரார்த்திப்போம்.**

உலக முதன்மையாக மனித நேயம் நிலைபெறக் கூட்டு வழிபாட்டிலும், மீள்குடியேற்ற ஊக்குவிப்பிலும் வழிபாட்டுத்தலங்களில் இணைந்து வழிகாட்டுக.

இந்து அரச ஊழியர்கள் இணையம் இணைப்பாளர் வே.கெ.தனபாலன், விபுலானந்தா கல்லூரி வவுனியா. (782)

**ஐரோப்பிய நாடுகளுக்கான VISA**

CANADA, UK, SWITZERLAND, GERMANY போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு VISA விற்கு விண்ணப்பம் செய்யும்போது, முறையான வழி நடத்தலைத் தெரிவுசெய்ய வேண்டும். உங்களுடைய ஆவணங்களைத் தகுந்த முறையில் சரி பார்த்து, தகுந்த ஆலோசனைகளையும் தருகின்றோம். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கும், ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கவும். VISA நிராகரிக்கப்பட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம். T.P No : 2504665. திருமதி R. செல்வராஜா, (789)


நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், ரஞ்சிதா, அனிதா நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE GURU
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே) (சி-2723)


**அஞ்சலிக்கூட்டம்**

ஈழத்து இலக்கிய முன்னோடி கே.கணேஷ் நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று பி.ப 4 மணிக்கு பட்டதாரிகள் பிரிவில் நடைபெறும்.


நாகம்ஸ் சுன்னாகம்

சில தினங்களுக்கு மட்டும்
அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த


காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)


# சாவகச்சேரி இந்துவுக்கு புதிய அதிபர் நியமனம்

(நெல்லியடி)

பளை கோட்டக்கல்வி அதிகாரியாக இதுவரை கடமையாற்றி வந்த அருணாசலம் கைலாயபிள்ளை - வட.கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் கடந்த 15 ஆம் திகதி முதல் தேசியப் பாடசாலையான சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இன் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர் என்பதுடன், முழங்காவில் மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராக முன்னர் பணி புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


HERO CYCLES TCA with NATIONAL BICYCLE INDUSTRIES, JAPAN MAKERS OF National/Panasonic
HERO

ஜப்பான் நிறுவனத்தின்
தொழில் நுட்பத்துடன் கூடிய நஷனல் பனசோனிக்
* பத்து கோடி மக்களின் விசுவாசத்தைப் பெற்றது
* இந்தியாவில் 55% பாவனைக்கு பயன்படுத்தப்படுகின்றது
சக்திமிக்கது உறுதியானது
Sole Agent:
Faizal Hardware Stores
74, Dam Street, Colombo 12. Tel: 94 11 2433727, 2423273, 2384250-4
Fax: 94 11 2446088 E-mail: faisto@sri.lanka.net


## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ.இல:- 30/003
தன்மை :- விவாகரத்து

வழக்காளி :- ஆனந்தராசா சிவலட்சுமி,
கச்சார்வெளி,
பளை.

எதிராளி :-
நல்லதம்பி ஆனந்தராசா,
வாதரவத்தை,
புத்தூர்.

### இடைக்காலத்தீர்வை

தமிழீழ மாவட்ட முறைமன்று நீதியாளர் திரு.த.செந்தூரன் அவர்கள் முன்னிலையில் சட்டவாளரும், வழக்காளியும் மன்றில் தோன்றியிருக்க அழைப்புக் கட்டளை வழக்காளி மூலம் சேர்க்கப்பட்டும், எதிராளி மன்றிற்கு சமூகம் கொடுக்காமையினால் கீழ் குறித்த இடைக்காலத்தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

வழக்காளி எதிராளிக்கெதிராக விவாகரத்துத் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வழக்காளியின் உரிமைக் கோரிக்கை, வழக்கறிக்கை என்பவற்றை ஆராய்ந்த மன்று அவற்றுக்கமைய வழக்காளி எதிராளியுடனான திருமணப்பதிவை இரத்துச் செய்வதற்கும், வழக்குச் செலவினை எதிராளியை வழங்குமாறும் இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டு கட்டளையிடப்பட்டுள்ளது.

வரைபு :- ஸ்ரீ.யோகராணி, சட்டவாளர்.
நீதியாளர், தமிழீழ மாவட்ட நீதிமன்று, கிளிநொச்சி

அறிவித்தல்.

எதிராளிக்கு,

இத்துடன் இணைக்கப்படும் இடைக்காலத்தீர்வையில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் அறிவித்தல் கிடைத்து 21 நாட்களுக்குள் மன்றில் நடவடிக்கையை மேற்கொள்ளவும், தவறும்பட்சத்தில் குறித்த இடைக்காலத்தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

வரைபு:- ஸ்ரீ.யோகராணி, சட்டவாளர்.
பதிவாளர், தமிழீழ மாவட்ட நீதிமன்று, கிளிநொச்சி.

(788)


20 வருடங்களுக்குப் பின்பு BRITISH COUNCIL
இனால் சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள் யாழ் நகரில் நடாத்தப்படும்!!

BRITISH BUSINESS SCHOOL
BRITISH COUNCIL உடன்
இணைந்து நடாத்தும்
மேற்கூறப்பட்ட சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகளைப் பற்றிய
இலவச Presentation (வழிகாட்டல்) இற்கு சமூகமளித்து
விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்

Date : Saturday 31st July 2004
Venue: Jaffna Public Library Auditorium
PresentationBy: Mr. Gerald Yorwerth, Examination Services Manager, BRITISH COUNCIL

| For Whom | Exam (Course) | Time of Presentation |
|---|---|---|
| For Adults | IELTS | 1pm - 3pm |
| | CAE, BEC | 3pm - 5pm |
| For Children | YLE, FCE KET, PET | 9.30am - 11.30am |

Presentation இற்கு வர விரும்புவோர் British Business School ல் இலவச Admission Card ஐ பெறவும். Admission Card இல்லாமல் அனுமதி இல்லை

October 2004 இல்
முதல் தடவையாக
IELTS, YLE, FCE, CAE, KET, PET, BEC
போன்ற
University of Cambridge (U.K) ESOL Examinations
யாழ் நகரில்
British Business School ஒழுங்கு செய்யும் பரீட்சை நிலையத்தில் BRITISH COUNCIL இனால் நடாத்தப்படும்.
British Business School மாணவர்களை மேற்கூறிய பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்தும்.

The Peninsula's English Academy
BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி : பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.
HOT LINE : 021-222-5796
British BUSINESS SCHOOL
Where Students Come First

# டெங்கு நோயினால் இதுவரை 54 பேர் இலங்கையில் பலி!

இலங்கையில் பரவியுள்ள டெங்கு ஆட்கொல்லி நோயின் காரணமாக மொத்தமாக 54 பேர் பலியாகியுள்ளனர். சுமார் ஏழாயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பிரதமர் தலைமையில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் மாத்திரம் டெங்கினால் 19 பேர் உயிரிழந்தனர். கம்பஹாவிலும், கண்டியிலும் தலா 8 பேரும், திருகோணமலையில் 5 பேரும் டெங்கினால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் டெங்கு நோயினால் 33 பேர் மாத்திரமே உயிரிழந்தார்.

2002 ஆம் ஆண்டிலேயே அதிகளவாக 67 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், தற்சமயம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த இரசாயன முறையைப் பயன்படுத்தாமல் சுயமான முறைகளைப் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கியூபாவில் டெங்குநோயினால் கடந்த சில வருடங்களுக்கு முனனர் 600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டபோது அங்கு பயன்படுத்தப்பட்ட சுயமான முறையே இலங்கையிலும் பயன்படுத்தப்படவுள்ளதாக நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற ஊடக தெளிவாக்கல் மாநாட்டில் பிரதமர் தெரிவித்தார். (01)

## மூன்று முதலமைச்சர்கள் பதவிகளை ஏற்றனர்

(கொழும்பு)

மாகாணசபைகளின் மூன்று முதலமைச்சர்கள் நேற்றுமுன்தினம் பதவி ஏற்றனர்.

மேல் மாகாண சபை, தென் மாகாண சபை, சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கே புதிய முதலமைச்சர்கள் நேற்று பதவி ஏற்றனர்.

மேல் மாகாணசபை முதலமைச்சராக - ரெஜினோல்ட் கூரே மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா முன்னிலையிலும், தென்மாகாண சபையின் முதலமைச்சராக டி சில்வா தென்மாகாண ஆளுநர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன முன்னிலையிலும், சப்பிரகமுவ மாகாணத்தின் முதலமைச்சராக மகிபால ஹேரத் சப்பிரகமுவ ஆளுநர் சாலி மத்தியு முன்னிலையிலும் பதவிப் பிரமாணம் செய்துள்ளனர்.

# படையினரின் தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நாட்டின் பாதுகாப்பையும், இறைமையையும் பாதுகாக்கும் படைமுகாம்களுக்குச் சென்று படையினரின் சுகதுக்கங்களை விசாரிப்பது எங்கள் அனைவரதும் பொறுப்பாகும்.

இவ்வாறு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

மின்னேரி காலாற்படை பயிற்சி நிலையம் மற்றும் மாதுறு ஓயா இராணுவ பயிற்சி முகாம் ஆகியவற்றின் கண்காணிப்புப் பயணத்தை முடித்த பின்னர் படையினர் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தூர இடங்களில் பாதுகாப்பு நிலவரத்தைக் கண்டறிவதைப் போன்றே, இராணுவப் படைப்பிரிவுகளில் கடமைபுரியும் இராணுவ வீரர்களது தேவைகள் குறித்தும் கண்டறியவேண்டும். அத்துடன் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடும் படையினர் மற்றும் படை அதிகாரிகளின் தேவைகள் குறித்து அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகளுக்கும், கருணாவுக்கும் இடையேயான பிரச்சினை- அது அவர்களது உள்ளகப் பிரச்சினையாகும். அது அரசிற்கு எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

# ஆயுதத்தை கீழே வைத்தால் தான் பேச்சு என்றால் அது தேவையில்லை

## திருமலை அரசியல் பொறுப்பாளர் எழிலன் தெரிவிப்பு

**தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கீழே வைத்த பின்னர் தான் பேச்சுவார்த்தை என்றால், அப்படியொரு பேச்சுவார்த்தை எமக்குத் தேவையில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னர் ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கே நாங்கள் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது தாக்குதல் தளபதியாக இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் சீலன் (சாள்ஸ் அன்ரனி) யின் 21 ஆவது நினைவு தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை திருகோணமலை நித்தியபுரி சீலன் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. கவிஞர் வ.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில்-

உயிரிலும் மேலாக நாம் நேசிப்பது ஆயுதங்களையே. நாங்கள் ஆயுத வெறிபிடித்தவர்கள் அல்ல. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத வெறி பிடித்தவர்கள் என்ற எண்ணம் யாருக்கும் வரக்கூடாது.

தமிழ் மக்களுக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் அதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. எதிரியைக்கூட மன்னிக்கலாம் ஆனால், துரோகிகளை ஒருபோதும் மன்னிக்கமுடியாது.

நாங்கள் ஆயுதங்கள் மீது வைத்திருந்த பற்றுதல்கள் காரணமாகவே அந்த ஆயுதங்களைக் காப்பாற்றுவதற்காக எத்தனையோ போராளிகள் தமது இன்னுயிரை ஆகுதி ஆக்கியுள்ளார்கள்.

ஆரம்பத்தில் ஆயுதத்தை காப்பாற்றவேண்டும் என்பதற்காக சகபோராளிகளுக்கு கட்டளையிட்டு, தன்னைச் சுட்டுவிட்டு பின்னர் ஆயுதத்தைத் தலைவரிடம் பாதுகாப்பாக எடுத்துச் சென்று கொடுங்கள் என்று கூறி தன்னுயிரை மாய்த்துக்கொண்டவன் தான் சீலன்.

உலகம் பயங்கொள்ளும் அளவுக்கு விடுதலைப் புலிகள் தங்களை வளர்த்துக்கொண்டுள்ளார்கள்.

சமாதானத்தைக்கொண்டு வர விரும்பியவர்களும் நாங்களே. கடந்த இரண்டரை வருடத்தில் இந்த நாட்டில் நிகழ்ந்த மாற்றம் என்னவென்றால், அது யுத்தம் நிறுத்தப்பட்டதே. வேறு எதுவும் இந்த நாட்டில் நிகழவில்லை.

இலங்கை அரசாங்கத்துக்கு 42 நாடுகளில் தூதுவராலயங்கள் இருக்கின்றன. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு 65 நாடுகளில் செயலகங்கள் இருக்கின்றன. அநதளவுக்கு நாங்கள் எங்களை வளர்த்துக்கொண்டுளோம். இதனை இலங்கை அரசாங்கமும், ஜே.வி.பியினரும் புரிந்துகொள்ளவேண்டும்.

தொடர்ந்து இறப்பதற்கும், இழப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இல்லை.

சமாதான காலத்தில் நாங்கள் பல போராளிகளை இழந்த துயரங்களுக்கு பதில் சொல்லவேண்டிய பாரிய பொறுப்பு - இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு எனவும் மேலும் அவர் தெரிவித்தார். (04)

# தனது தனிப்பட்ட சொத்துக்களையே ஹெல உறுமய பயன்படுத்துகிறதாம்

### திலக் கருணாரட்ன தெரிவிப்பு

தனது தனிப்பட்ட சொத்துக்களை கட்சியின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டாமென திலக் கருணாரட்ன ஜாதிக ஹெல உறுமயவுககு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது ஹெல உறுமயவின் தலைமைக் காரியாலயம் இயங்கும் கட்டடம் எனது சொத்தாகும். எனவே, எவ்வளவு விரைவாக இதனை என்னிடம் ஒப்படைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஒப்படைக்கவும்.

அத்துடன், ஹெல உறுமய கட்சியின் - எந்தவொரு பதவி நிலைகளிலும் நான் பதவி வகிக்கவில்லை. எனவே, எனது தனிப்பட்ட சொத்துக்களை கட்சியின் செயற்பாடுகளுக்கு பாவிப்பதனை நான் விரும்பவில்லை.

அத்துடன், ஹெல உறுமய கட்சியை எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் நான் கட்டியெழுப்பினேன். ஆனால், மத அடிப்படைவாதிகள் அதனைக் கைப்பற்றி பதவிகளில் இடம்பிடித்துள்ளனரெனவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் தோல்விக்கு காரணமென ரணில், எஸ்.பி மீது குற்றச்சாட்டு!

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்கொண்ட தோல்விக்கான பொறுப்பைக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க ஆகியோர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

மத்திய மாகாணத்தில் ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டத்தைக்கூட கட்சியின் தலைமை ஏற்பாடு செய்யவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள மத்திய மாகாண வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் முதலமைச்சர் பதவி வேட்பாளரை ஒரு பிரதிநிதியையுமே கட்சியின் தலைமை நியமிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஊடகத்துறைக்கான புதிய சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதாம்

### ஜே.வி.பி. கூறுகின்றது

ஊடகத்துறைக்கான புதிய சட்டமூலம் ஒன்றை எதிர்க்கட்சிகள் கொண்டு வர முனைவது, அரசியல் அமைப்புக்கு எதிரான செயலாகும் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமானால், அது உரிய அமைச்சரின் மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

ஆனால், தற்சமயம் எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் முனைப்பானது அரசியல் அமைப்புக்கு முரணானது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதைக் கொண்டு சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பிக்க முனைவது முரணான செயல் என அந்தக் கட்சி கூறுகிறது.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில், எதிர்க் கட்சிகள் சுயாதீனமாக கருத்தை வெளியிடக்கூடிய வகையிலான சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவெடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

## அமைச்சரின் இந்திய விஜயம் ரத்து

அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே இந்தியாவிற்கான விஜயத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ரத்துச் செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தியாவில் பல நிறுவனங்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு இலங்கைக்கு இடைநிறுத்தப்பட்டுள்ள பால்மா வகைகள் இறக்குமதி குறித்து கலந்துரையாடுவதற்காகவே இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டதாக அமைச்சர் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தை இரத்துச் செய்வதாக ஜனதிபதி செயலகம் தனக்கு அறிவித்ததாக, அமைச்சர் இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் ஊடுருவலாம் என கதிர்காமத்தில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கதிர்காமம் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தரும் கருணா அணியின் ஆதரவாளர்களை கொலை செய்வதற்காக, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் செல்வார்களென கிடைத்த விபரங்களின் அடிப்படையில், கதிர்காமம் பகுதியில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

திருவிழாவைக் கண்டுகளிப்பதற்காக மட்டக்களப்பு, பொத்துவில் அக்கரைப்பற்று உட்பட விடுவிக்கப் படாத பிரதேசங்களிலிருந்து கதிர்காமத்துக்கு வரும் தமிழர்களை கடுமையான சோதனைக்கு உள்ளாக்குவதற்கு, பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தங்கல்ல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.கே.சுகதாஸ தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து வரும் தமிழர்களை சோதனை செய்வதற்கு கதிர்காமத்திலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள யால பிரதேசத்தில் வீதித்தடைகளை ஏற்படுத்தி பரந்தளவில் பொலிஸ் அதிகாரிகள் குழுவை ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகும் திருவிழாவின் பொருட்டு பெருமளவில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் நகாப பாதுகாப்பு கடமையிலும் ஈடுபடுவார்கள். அத்துடன், கதிர்காம நகரில் பொலிஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸார் -கதிர்காம நகரிலுள்ள விடுதிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கையை மேற்கொள்வாரென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# மோதரையில் கைதான இளைஞன் 14 நாட்கள் விளக்க மறியலில்

(கொழும்பு)

கொழும்பு மோதரைப் பகுதியில் வைத்து, நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த இளைஞனை, நேற்றுமுன்தினம் பொலிஸார் கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இதனையடுத்து, அவரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். தாம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, சயனைட் குப்பி ஒன்றுடனும், வெடிபொருட்களுடனும் குறிப்பிட்ட இளைஞன் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், பிரதேச வாசிகளின் தகவற்படி குறிப்பிட்ட இளைஞன்- உறவினர் ஒருவரை தேடிவந்த போது, சிங்கள இளைஞர்களால் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## 2 நாட்களுக்கு முன்னர்

# காணாமற் போயிருந்தவர் கிணற்றில் சடல்மாக மீட்பு

அக்கரைப்பற்று இலுக்குச்சேனை எனும் இடத்தில், கிணறு ஒன்றிலிருந்த அழுகிய சடலம் ஒன்றைப் பொலிஸார் மீட்டெடுத்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை மாலை இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

உயிரிழந்தவர் அக்கரைப்பற்று 7 ஐச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சுந்தரம் ஆவார். இவரை இவரது மனைவி கடந்த இரு நாட்களாகத் தனது கணவனைக் காணவில்லையென பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.


சடலம் மீட்கப்பட்ட கிணறு, உயிரிழந்தவரின் வீட்டிலுள்ள கிணறு என்பதுடன், இலுக்குச்சேனை எனும் இடம் - தமண பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.


சம்பவ இடத்திற்குச் சென்ற மாவட்ட நீதிவான் கொலையா, தற்கொலையா அல்லது கவனயீனத்தால் நடந்ததா என, மேலதிக விசாரணைகளை நடாத்தி, அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.


சடலத்தைப் பிரேத பரிசோதனை நடாத்துமாறு உத்தரவிட்டதை அடுத்து, அம்பாறை பொது வைத்தியசாலையில் சடலம் சேர்க்கப்பட்டுள்ளது.

# ஆசியக் கிண்ண கிரிக்கெட்

## எமிரேட்ஸ் அணியை இலகுவாக தோற்கடித்தது இந்திய அணி!







(தம்புள்ள)

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் - நேற்றுமுன்தினம் பகல் - இரவாக நடைபெற்ற ஆட்டமொன்றில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை 116 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிகொண்டது.

தம்புள்ளவில் நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இலகுவாக ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெறலாம் எனக் கருதியிருந்த இந்திய அணியினருக்கு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி ஆரம்பத்திலேயே அதிரடி வைததியம் கொடுத்தது.

இந்திய அணி எந்தவொரு ஓட்டத்தையும் பெறாதிருந்தபோது - ஷேவாக் ரன் அவுட்டானார். பின்னர் மந்தமாகத் தொடர்ந்த விளையாட்டில், 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த டெண்டுல்கர் அடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து கங்கூலியும் லக்ஷ்மனும் இணைந்து ஓட்டங்களை மெதுவாகக் குவித்துக்கொண்டிருக்கையில், லக்ஷ்மன் 14 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து கங்கூலி - ராவிட் ஜோடி நிலைத்து நின்றது. ஆயினும் கங்கூலி 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

ஆயினும் ராவிட் நிதானமாக அதிரடி ஆட்டம் ஆடினார். இவர் 93 பந்துகளில் 104 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். யுவராஜ் சிங் 30 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

50 ஓவர்கள் நிறைவில் ஆட்டம் முடிவுற்றபோது இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கைவ் 31 ஓட்டங்களுடனும், பதான் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீசசில் அசின் சையிட் 1, முகமட் தாகிர் 1, குரம்கான் 1, ரிஸ்வான் லதீப் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி, ஆரம்பத்திலிருந்தே விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

மொகமட் தாகிர் மட்டும் 55 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர்.

35 ஆவது ஓவரிலேயே எமிரேட்ஸ் அணி, 144 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

இந்திய அணி மோசமான பந்துவீச்சின் மூலம், உதிரிகளாக 34 ஓட்டங்களைக் கொடுத்தனர். பதான் - 3, டெண்டுல்கர் - 3, பாலாஜி - 02, சகீர்ஹான், கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

## பாகிஸ்தான் 76 ஓட்டங்களால் பங்களாதேஷை தோற்கடித்தது



ஆசிய கிண்ணப் போட்டியில் நேற்று பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 76 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியைத் தோற்கடித்தது.

பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு யாசிர் ஹமீத்தின் சதமும் சொகைப் அக்தர் கைப்பற்றிய மூன்று விக்கெட்டுக்களுமே பெரு உதவியாக அமைந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நல்ல தொரு அடித்தளத்தை இட்டனர்.

இந்த அணியின் முதல் விக்கெட், 86 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் விழுந்தது. இதன் பின் அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்பாக யாசிர் ஹமீத் 102, இம்ரான் பர்கத் 28, இன்ஸமாம் உல்ஹக் 59, யூசுப் யுகானா ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் - அப்துர் ரசாக் 2, ரபாஸ் பயிஸா, காலித் மஃமூட், மொகமட் ரபிகியூ ஆகிய மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 258 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், பாகிஸ்தான் அணி 76 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பில் யாவிட் ஓமர் 62, அலோக் கபாலி 28 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.பந்துவீச்சில் சொகைப் அக்தர் 3, சமி, மலிக் ஆகிய இருவரும் தலா இரண்டு, டனிஸ் கனேரியா, இம்ரான் பர்கத் ஆகிய இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




### ஏதென்ஸ் ஒலிம்பிக்

## நீளம் பாய்தல் போட்டிக்கு மரியன் ஜோன்ஸ் தகுதி!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க தகுதிச் சுற்று தடகளப் போட்டியில் மகளிர் நீளம் பாய்தலில் மரியன் ஜோன்ஸ் முதலாம் இடத்தைப் பெற்று ஒலிம்பிக்கில் பங்குபற்றத் தகுதி பெற்றார்.

அமெரிக்க தடகள தகுதிச் சுற்றுப் போட்டியில் மகளிர் நீளம் தாண்டுதலில் 7.11 மீற்றர் தூரம் தாண்டி மரியன் ஜோன்ஸ் முதலாம் இடத்தைப் பெற்றார்.

கடந்த 6 ஆண்டுகளில் அமெரிக்க மகளிர் நீளம் தாண்டுதலின் சிறப்பம்சம் இதுவாகும்.

மகளிர் நீளம் தாண்டுதலில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான மரியன் ஜோன்ஸ், 100 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக்கிற்குத் தகுதி பெறத் தவறியது குறிப்பிடத்தக்கது.

மகளிர் நீளம் தாண்டுதலில் கிரேஸ் உப்சா 6.83 மீற்றர் தூரம் தாண்டி இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.ஏ.ஏ. எப்.கிராண்ட் பிரி தடகளப் போட்டியில் வெற்றி பெற்ற பின்பு, ஜோன்சின் சிறப்பம்சம் இதுவாகும். அமெரிக்க தகுதிச் சுற்று தடகளப் போட்டிகள் இன்றுடன் முடிவடைகின்றன.



100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஒலிம்பிக்கிற்கு ஜோன்ஸ் தகுதி பெறாததால். இந்த முறை ஒலிம்பிக்கில் ஜோன்ஸ் பங்கேற்பது குறித்து யூகத்தில் அடிப்படையிலான செய்திகள் வெளிவந்தன.

ஆனால், இவற்றை பொய்யாக்கும் விதமாக நீளம் தாண்டுதலில் ஜோன்ஸ் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றார். நீளம் தாண்டுதல் போட்டி முடிந்த பிறகு பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்க மறுத்த, மரியன் ஜோன்ஸ் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

## ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி; இந்தியா - இலங்கை இன்று மோதல்!

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹொங்கொங், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய 6 நாடுகள் கலந்துகொள்ளும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இன்று நடைபெறும் ஒரு ஆட்டத்தில் இந்திய - இலங்கை அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் பகல் இரவு ஆட்டமாக தம்புள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டிக்கான இந்திய அணியில் மாற்றம் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய - இலங்கை இடையேயான ஆட்டம் பிற்பகல் 2.45 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்று நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் பாகிஸ்தான் - ஹொங்கொங் அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி காலை 9.50 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

### மென்பந்து கிரிக்கெட் போட்டி!

இரத்தினசாமி ஞாபகார்த்த கேடயத்துக்கான - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் - இன்று மாலை 3.30 மணிக்கு ஞானம்ஸ் விளையாட்டுக் கழகததை எதிர்த்து ஸ்பேஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

### உதைபந்தாட்டப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்ட பிரிவின் அனுமதியுடன் - பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் -

இன்று பிற்பகல் 3 மணிக்கு கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 4 மணிக்கு, அல்வாய் நண்பர்கள் கழகத்தை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (13)

### கூடைப்பந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்!

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் யாழ்.மாவட்ட ரீதியாக பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

எனவே பங்குபற்ற விரும்பும் அணியினர் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப் படிவஙகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## இளையோர் உதைபந்தாட்டப் போட்டி; கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்!

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்படும் மேஜர் முரளி நினைவான இரண்டாவது தமிழீழ தேசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று -

19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணியை மன்னார் அணி வென்றது.

இதில் மன்னார் அணி வீரர் லூயிஸ் அல்போன்ஸ் 2 கோல்களையும், நியூட்டன் ஒரு கோலையும் அடித்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில், 3:1 என்ற கோல் கணக்கில் திருமலை அணி கிளிநொச்சி அணியை வென்றது. ஆட்டநேரத்திலும், மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் கோல் எதையும் போடததால் பனால்டி மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான மற்றொரு போட்டியில் யாழ். அணி வீரர் சுதர்சன் கோல் ஒன்றைப் போட்டு மன்னார் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து யாழ். அணியின் வெற்றிக்கு வழிசமைத்தார். ஆட்டநேரத்தில் இரு அணிகளும் கோல் போடவில்லை. மேலதிகமாக கொடுக்கப்பட்ட நேரத்திலேயே கோல் போடப்பட்டது.

கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற லீக் முறையிலான 14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் யாழ்.அணி வீரர் சதீஸ்வரன் கோல்போட்டு மன்னார் அணியை 1:0 கோல் கணக்கில் தோற்கடித்தார்.

அடுத்து நடைபெற்ற கிளிநொச்சி, திருகோணமலை அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி அணிகளுக்கிடையில் நடைபெற்ற பிறிதொரு போட்டியில் யாழ்.வீரர் நி.ஜெரோன் கோல் போட்டு முல்லை அணியை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு போட்டியில் சுவிஸ் அணி வீரர்கள் ம.சிந்துாஸ்கர், சி.சுகந்தன் ஆகியோர் தலா இரு கோல்களைப் போட்டு, 4:0 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியை தோற்கடித்தனர்.

அம்பாறை - திருகோணமலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் இரு அணிகளும் கோல் எதையும் போடாததால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக குணரட்ணம் ஆர்னோல்ட், ஜீவராஜா, சசிவர்ணன், ரங்கன், சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

## கோபா அமெரிக்கா காலிறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பம்!




கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட் டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று தொடங்கவுள்ளது.

இதில் முதலாவது போட்டியில் ஆர்ஜென்ரீனா - பெரு அணிகள் மோதவுள்ளன.

2 ஆவது காலிறுதியில் கொலம்பியா - கோஸ்டாரிகா அணிகள் மோதவுள்ளன். நாளை நடைபெறும் காலிறுதியில் பரகுவே - உருகுவே, பிரேசில் - மெக்சிக்கோ அணிகள் மோதவுள்ளன.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# பாரம்பரிய கலைகளைப் பேணுவதன் மூலம் எமது இனத்தை அடையாளப்படுத்த முடியும்

## கலைவிழாவில் இளம்பரிதி தெரிவிப்பு



எமது உரிமைகளை அரசியல் ரீதியாகப் பெற்றுக் கொள்வதற்கு, அரசுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். அதை விடுத்து எம்மக்கள் மீது இராணுவ நெருக்கடியைப் பிரயோகித்தால் நாம் அதே வழியைக் கையாண்டு, எமது உரிமைகளை வென்றெடுப்போம், எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்ற பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், எமது இனத்தின் பாரம்பரியக் கலைகள் அழிக்கப்பட்டு வருகிறது.

எமது இனத்தின் விழுமியங்களையும், இருப்பையும் ஆட்டங்காணச் செய்வதற்காக, முதல் அழிக்கப்பட்டது யாழ்ப்பாணப் பொது நூலகம்.

எமது இலட்சியத்தை அடைவதற்கான ஒரு கருவியாகவும் இக்கலைகள் காணப்படுகின்றன. அதனால்தான், ஆக்கிரமிப்பாளர்கள் திட்டமிட்டு எமது கலைப் பொக்கிசமாகிய பொது நூலகத்தை அழித்தார்கள்.

ஒரு இனத்தின் பண்பாட்டினதும், பாரம்பரியங்களினதும் உயிர்நாடியாக உள்ள கல்வியை அழிப்பதன் மூலம் ஒரு இனத்தின் இருப்பை அழிக்க முடியும். அதனால்தான், ஆக்கிரமிப்பாளர்கள் அதைச் செய்தார்கள்.

உங்களுக்குத் தெரியும் - நாங்கள் மரபு ரீதியாக ஒரு படையை நிறுவி, அதை இராணுவத்துக்குச் சமனாகப் பேணிவருகின்றோம். எமது தலைவர், எமது படையணிகளை மரபு ரீதியாகக் கட்டியெழுப்பியதனால்தான் அவர்களால் எம்மோடு களங்களிலே எதிர்நிற்க முடியாமல் உள்ளது.

இப்போது எமது இனத்தின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் அழிக்கும் செயல்களிலே இனவாதிகள் இறங்கி உள்ளார்கள்.

ஒரு இனத்தை படை பலத்தாலோ, அரசியற்பலத்தாலோ வெல்லமுடியாதபோது, அந்த இனத்தின் கலாசாரத்தைச் சிதைப்பதே ஆக்கிரமிப்பாளர்கள் மேற்கொள்ளும் அடுத்த கட்ட நடவடிக்கை.

ஆயினும், எமது இனத்தின் ஒழுங்கு முறையும், எமது இனத்தின் அரசியற்தெளிவும், அதற்கு முகம்கொடுத்து, அதனை முறியடித்து எமது சமூகத்தை நெறிப்படுத்தி நிற்கின்றது.

எமது விடுதலைப் போராட்டம் களநிலையில் இருந்து, விரிவடைந்து இலங்கைவரை சென்று இலங்கைத்தீவு மட்டத்தில் கையாளப்பட முடியாத நிலையில், பிராந்திய நிலைக்குச் சென்று அங்கும் இயலாத நிலையில், சர்வதேச ரீதியாக வியாபித்து நிற்கின்றது.

உண்மையிலேயே ஒரு விடுதலைப் போராட்டம் சர்வதேச நிலைக்கு வியாபித்துச் செல்கின்ற வகை, அந்தப் போராட்டம் தமது இறுதி நிலையை வந்தடைகின்றது. அந்த வகையில் தற்பொழுது எமது போராட்டம் உலக மயமாக்கற்போக்கிற்கு முன்னெழுந்து நிற்கின்றது.

இந்த உலக மயமாக்கற்போக்குடன் நாங்கள் முட்டிமோதி அதிலே ஒரு முன்னேற்றத்தை காண்கின்றபோது எமது விடுதலை சாத்தியமாகும்.

இந்த விடுதலை என்பது என்ன? நாங்கள் இன்று இருக்கின்ற இந்த நிலையில் இருந்து, நாங்கள் ஒரு புதிய மனித சமுதாயத்தையோ, புதிய உலகத்தையோ படைப்பதுதான் விடுதலை. இதுதான் ஆன்மீகவாதிகளினதும், அரசியல்வாதிகளினதும், சமூகவியலாளர்களினதும் கருத்தாகும்.

அதுவே தமிழினத்தின் விருப்பமும் ஒட்டுமொத்தக் கடமையுமாகும். அந்த வகையில் எம் விடுதலை அப்போது சாத்தியமாகும் என்கின்ற எண்ணம் எம்மக்களது மனதில் இருக்கின்றது. நாம் எல்லோரும், இந்த விடுதலை என்கின்ற விடயத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் கிடைத்தன

நல்லூர் பிரதேசபை எல்லைக்குள் இயங்கும் ஆயுர்வேத வைத்திய நிலையங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் நாவின்ன ஆயுர் வேதக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேசசபைக்குள் இயங்கிவரும் மூன்று ஆயுர்வேத வைத்திய நிலையங்களுக்கே இவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேசசபைச் செயலர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

வழமையாக வழங்கப்படும் மருந்துகளே இந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டிருப்பதாகவும், தற்போது இந்த மருந்தகங்களின் சிகிச்சை பெறுவதற்கு அதிக அளவிலான மக்கள் வந்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார் (ப)

## உயர் பாதுகாப்பு வலய விவசாயிகளுக்கான கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள விவசாயிகளுடனான கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு கோயிலாக் கண்டி மகாலட்சுமி மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளே இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (29)

—உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு—

## மானிப்பாய் பிரதேச சபை நடத்தும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டி

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை - யாழ். மாவட்ட மட்டத்தில் மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. அற்கான விண்ணப்பங்களை பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் கோரியுள்ளார்.

இதன்படி ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி 35 மைல் எனவும், ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி 7 மைல்கள் எனவும் இந்த இரண்டு போட்டிகளுக்கும் வயதெல்லை கிடையாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் விண்ணபத்தாரிகள் அதன் படிவங்களை மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளும்படியும், இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை என்பதுடன், இந்தப்போட்டிகளின் திகதி, நேரம் என்பன படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் செயலாளர் தெரிவித்தார். (100)(91)


## மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கஜேந்திரன் எம்.பி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் நேற்று முன்தினம் மாலை யாழ்.மாவட்ட மீனவர்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து யாழ். மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அவரிடம் தெரிவித்தனர். யாழ். மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையில் சமாச அலுவலகத்தில் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கடற்றொழிலாளரின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இது குறித்தும், மீனவர் பிரச்சினை குறித்தும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து பேசிவிட்டுத் தம்மாலான முயற்சிகளை செய்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் உறுதியளித்துள்ளார். (ப)



மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

## நாவற்குழி சிறுவர் பாடசாலைக்கு இராணுவத்தினர் தளபாடங்கள் அன்பளிப்பு

இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தும், படையினரின் திட்டத்தில் கீழ் நாவற்குழிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சமாதான கிராமத்தை பார்வை இடுவதற்காக, யாழ் பாதுகாப்பு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.டி. எஸ்.சந்திரபால கடந்த 6 ஆம் திகதி விஜயம் செய்தார். இந்தக் கிராமத்தில் சிறு பிள்ளைகளுக்கு பாலர் பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்தப் பாடசாலைக்குத் தேவையான கதிரை, மேசை, வேறு உபகரணங்களும், யாழ்.இராணுவத் தளபதி மூலம் பெற்றுக்கொடுககப் பட்டது. கடந்த 6ஆம் திகதி காலை கைதடி நாவற்குழி யில் அமைக்கப் பட்டுள்ள சமாதான கிராமத்தில் வைத்து 52 ஆவது படையணி பிரிகேடியர் திஸ்ஸ ஜயவர்த்தனாவினால் அந்தப்பாலர் பாடசாலை மாணவர்களுக்கு தளபாடம் வழங்கப்பட்டது.

யாழ்பாதுகாப்பு படைத் தலைமையகம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிககப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதியில்—

## 15 வருடமாக திருத்தப்படாதிருந்த மதகு, கால்வாய் மீள்புனரமைப்பு!

வலி.தென்மேற்கு பகுதி சண்டிலிப்பாய் கராஜ்றோட்டில் அமைந்துள்ள மதகும், கால்வாயும் உள்ளூராட்சி வாரத்தையொட்டி மானிப்பாய் பிரதேசசபை ஊழியர்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

15• வருட காலமாக மேற்படி மதகும், கால்வாயும் திருத்தப்படாத நிலையில் உள்ளதனால் - டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அந்தப் பகுதி பொதுமக்கள் தமக்கு முறைப்பாடு செய்துள்ளதாக பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் கராஜ் வேலைகள் மூலமாகப் பாய்ந்துவரும் வெள்ள நீரானது வீதியைக் கடக்க முடியாது குடிமனைகளுக்குள் செல்வதாகவும, சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுத்ததாகவும் செயலாளர் தெரிவித்தார். (100)

## தமிழ்த் தினவிழா

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் தமிழ்த்தின விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவி ஆ.அனுசியா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் பீடத்தின் இயக்குனர் அ.குமாரவேல் கலந்து கொள்வார். (100)

## கோட்டமட்ட சமூகக்கல்வி போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்.கல்வி வலயத்தில் இந்த வருடத்திற்கான கோட்டமட்ட சமூகக் கல்விப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கோப்பாய்க் கோட்டத்தைச் சேர்நத மாணவர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த மாணர்வகளுக்கு யாழ்.இந்துக் கல்லூரியிலும் யாழ்.கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இந்தப்போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் போட்டிநடைபெறும் இடத்திற்கு காலை 10 மணிக்கு முன்பு வருகை தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பளர் கேட்டுள்ளார்.

## நெடுந்தீவு மின் விஸ்தரிப்புக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபையூடாக இந்த வருடத்துக்கென, நெடுந்தீவு கிழக்கு - மத்திய பகுதிகளின் மின்சார விஸ்தரிப்புக்கென, பின்தங்கிய கிராமங்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற ஐந்து லட்சம் ரூபாவுக்கான வேலைகளுக்குரிய மதிப்பீடுகள் இலங்கை மின்சாரசபையினால் தயாரிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த நிதிக்கமைய் பிரதேசசபை சந்தியில் இருந்து, வல்லை வீதியில் 400 மீற்றருக்கும், மாவிலித்துறை முகத்தில் இருந்து அந்தோனியார் ஆலய செபநாயகபுர வீதியில் 400 மீற்றர், மின் இணைப்பு வழங்கவும், பற்றிமா ஆலயச் சந்தியில் இருந்து பெருக்கடி வீதிக்கு புதிய மின்கம்பங்கள் பொருத்தி மின்னிணைப்பு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த மின்சார விஸ்தரிப்பின் மூலம் பல குடும்பங்கள் மின் இணைப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் கிடைக்கும். (113)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்



பெயர் : வி. கௌசல்யா
முகவரி : சீனியர் லேன், கலட்டி, வண்ணை

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்



# உயிர்த்தெழுமா சிம்பாப்வே?



ஹீத் ஸ்ரீக்
"எங்களுக்காக நீங்கள்"

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் இருந்து விலக்கப்பட்ட வீரர்கள் 15 பேர் இந்த விடயம் தொடர்பான சர்ச்சையின் காரணமாக 2004 டுக்கான சிம்பாப்வேயின் டெஸ்ட் தொடர் டப் பட்டுவிட்டன. அது ஒருபுறம் இருக்க அணியில் இருந்து சர்ச் க ள

விலகிய வீரர்கள் அல் லது

ஆம் ஆண் களே பிற்போ சி ம் பா ப் வே சைகதுள்ளான வீரர் இப்போது இங்கிலாந் துக்கு நட்புறவு கிரிக்கெட் சுற்றுப் பய ணம் ஒன்றை மேற் கொள்ளப் போகிறார் களாம். இந்த அணி யின் பெயர் 'சிவப்பு சிங்கங்கள்'. இந்தச் சுற்றுப் பயணமா னது முற்று முழு தாக சமூக நோக் கம் கொண்டதே அன்றி அரசி யல் நோக் கம் கொண டதல்ல. அதோடு ஒரு மன ஆறுத லுக்கான சுற்றுப் பயணம் என்பதே கூடுதலாக பொருந்தும் என்கிறார் ஸ்ருவட் கார்லைல். இங்கிலாந்து செல்வதற்கான செலவினங்களை சமாளிக்கும் வகையில் இவர்கள் நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களாம். இதில் ஒரு விடயம் என்னவென்றால் இந்த வீரர்கள் மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் சந்தர்ப்பம் வரும் என்ற நம்பிக்கை இல்லாமல் இல்லை என்பதுதான். அரசியலை விட்டு விட்டு கிரிக்கெட் கண்கொண்டு மட்டும் பார்த்தால் இவர்களும் பாவம்தான். ஆனால் ஹீத்ஸ்ரீக் இங்கிலாந்து வோரிக்ஷயர் கவுண் ரியில் விளையாடுகிறார். சோன் ஏர்வின் அவுஸ் ரேலியா சென்று விட்டார். அன்ரி பிலிக்நோட் தஸ்மேனியாவிற்காக விளையாடப் போகிறார். இப்படி பலரைப் பார்தாலும் இன்னும் பலரின் எதிர்காலம் என்ன?

என்றாலும் சிம்பாப்வேயில் இருந்த வீரர்களான ஹென்ரி ஒலங்கா, மரே குட்வின் போன்றவர் களும் அவர்களுடன் இணைந்து கொள்வார் கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே சிம்பாப்வேயின் சர்வதேசத் தரம்வாய்ந்த கிரிக்கெட் அணி ஒன்று இங்கிலாந்தில் நட்புறவு கிரிக்கெட் ஆட்டங்களில் கலந்து கொள்ளப் போகின்றது. இந்த வகையில் பார்க்கும் போது சிம்பாப்வேயின் கிரிக்கெட் ஆற்றல் முற்று முழுதா கவே பழுதுபடாமல் அப்படியே பேணப்படு வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதை அவதானி க்க முடிகிறது. இதனை ஒரு நல்ல சகுனமாகக் கொண்டு சிம்பாப்வே கிரிக்கெட் அணி மற்றும் ICC யுடன் இணைந்து ஏனைய கிரிக்கெட் சபைகள் எல்லாம் ஒன்று கூடினால் மீண்டும் பழைய சிம்பாப்வேயை காணமுடியும். இது நடக்குமா?

-மக்டலின்.



கிராண்ட் பிளவர்
"மீண்டும் மலருங்கள்"


# பறப்பதெல்லாம் உயர்வல்ல



டங்கன் பிளெட்சர்
"நல்ல வாத்தியார்"

சிறந்த மாணவன் ஒருவன் நல்லாசிரியனாக இருக்க முடிவதில்லை. அப்படி எதிர்பார்ப்பது ஏமாற்றமாகவே முடியும் என்பதற்கு கிரிக்கெட்டில் நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. இந்த விடயம் ஏன் உதயமாகிறது என்றால் -பயிற்றுனர்கள் நியமன விடயத்தில் ஏன் நம் நாட்டில் சிறந்தவர்கள் இல்லையா என்ற கேள்வியை பலர் எழுப்புகிறார்கள். ஆனால் வெளிநாட்டுப் பயிற்றுனர்கள் தான் வெற்றியடைந்திருக்கிறார்கள். எனவே தத்தம் நாட்டவரை நியமிக்காமல் வெளிநாட்டவரை நியமிப்பது நாட்டுப் பற்றற்ற ஒரு செயல் என்ற வாதமும் இங்கு அடிபட்டுப் போகிறது.

இங்கு ஒரு சுவையான விடயம் என்னவெனில் இங்கிலாந்தின் உதைபந்தாட்டப் பயிற்றுனர் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர். பாகிஸ்தானின் ஹொக்கி அணியின் பயிற்றுனர் ஒரு நெதர்லாந்துக்காரர். கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியது போல இன்னொரு புறம் பார்கும் போது உலகின் அதிசிறந்த கிரிக்கெட் வீரர் கார்மீல்ட் சோபர்ஸ் ஆரம்ப கட்டத்தில் இலங்கையின் பயிற்றுனராக அமர்த்தப்பட்டது தோல்வியில் முடிவடைந்தது. ஆனால் இலங்கையை சர்வதேச தரத்துக்கு உயர்த்தியவர் டேவ்வட்மோர். இவர் அரவிந்த டி சில்வா, அர்ஜுனரணதுங்க போன்ற சிறந்த கிரிக்கெட் வீரர்கள் அல்ல. ஆனால் அவர்களைச் சிறந்தவீரர்களாக உருவாக்கியவர் இவர். இந்த வகையில் அவுஸ்ரேலியப் பயிற்றுனராக இருப்பவர் ஜோண் புக்கானன் மாறாக அலன் போடரோ கிரேக் செப்பலோ அல்லது இயன் செப்பலோ அவுஸ்ரேலியப் பயிற்றுனராக இல்லை. இந்தியாவின் சுனில் கவாஸ்கார், கபில் தேவ், குண்டப்பா விஷ்வநாத் போன்றவர்கள் இருந்தாலும் இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் ஜோன்ரைட்தான் இன்னும் பார்த்தால் இங்கிலாந்தின் கிரிக்கெட் பயிற்றுனராக கிரகம் கூச் அல்லது டேவிட் கவர் அல்லது இயன் பொத்தம் பயிற்றுனராக இருந்திருக்க வேண்டும். ஆனால் இங்கிலாந்தின் கிரிக்கெட் பயிற்றுனர் இங்கிலாந்தை தாயகமாகக் கொள்ளாத டங்கன் பிளெட்சர் தான். நியூசிலாந்தின் பயிற்றுனர் றிச்சட் ஹட்லியோ அல்லது மார்டின் குறோவோ அல்ல. எனவே கிரிக்கெட் வீரர்களையும் அணியையும் சர்வதேசத்தரத்துக்கு உருவாக்குபவர்கள் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் அல்ல சிறந்த பயிற்றுனர்களே. பயிற்றுனர்கள் கொண்டிருக்கும் போதனையாற்றல் மற்றவர்களிடம் இல்லை என்பதே உண்மை.



வட்மோர்
"வெற்றி ஆசான்"

இந்த வகையில்தான் பாகிஸ்தானுக்கு இங்கிலாந்தின் பொப் வூல்மர் கொண்டு வரப்பட்டிருக்கிறார். இவரது ஆற்றல் ஒரு பாகிஸ்தானியப் பயிற்றுனருக்கு சரிவராது என்றே கருதப்படுகிறது. இந்த இடத்தில்தான் இரண்டாம் முறையாக பாகிஸ்தானின் பயிற்றுனராகக் கொண்டு வரப்பட்டும், ஜாவிட் மியான்டாட்டினால் உரியதைக் கொடுக்க இயலவில்லை என்பதைப் பார்க்க வேண்டும்.

எனவே இங்கு சில விடயங்களை மனதில் கொள்ள வேண்டும். ஒரு நாட்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் அந்த நாட்டின் தேசிய அணிக்கும் பயிற்றுனராக வரவேண்டும். என்பது எந்த அளவில் வெற்றியளித்துள்ளது? வெளிநாட்டுப் பயிற்றுனர்கள் கொண்டுவரப்படுவதால் கிரிக்கெட் சபைகள், தாய் நாட்டுப் பற்றை இழந்து நிற்கின்றன என்றதொரு கருத்தை ஏற்றுக் கொள்ளலாமா? கிரிக்கெட் தொடரில் கடந்தகாலப் பிரபலங்கள் சட்டாம்பிள்ளைத்தனமாக பேசிக் கொண்டிருக்கலாமா என்பவையே அவை.

-ஜெயா

# அறிமுகமாகிறது சீன ரெனிஸ் திருவிழா



சீனப்பெருஞ்சுவர்"உன் முதல் பரிசு யாருக்கு"

விம்பிள்டன், அமெரிக்க, பிரெஞ், அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகள் மாபெரும் GRAND SLAMS இதைவிட ஏராளமான ரெனிஸ் போட்டிகள் தற்போது இந்த வரிசையில் மிக முக்கியமான நாடொன்று கால் வைக்கப் போகிறது. இதுதான் சீன ஓபன் ரெனிஸ் போட்டிகள், இது ஆசியாவின் முதன்மை ரெனிஸ் சுற்றுப் போட்டியாக அமைய வேண்டும் என்பது சீன மக்களின் பெரு விருப்பம். இதனை சாதிக்கக் கூடிய வல்லமையும் அவர்களிடம் உண்டு.

முதலாவது சீன ஓபன் ரெனிஸ் போட்டிகளில் பங்கு பெற ஒப்புக் கொண்டவர்களில் முதன்மையானவர்கள் செரினா வில்லியம்ஸ் மற்றும் மரியா ஷரபோவா இவர்களுடன் ஜெலினா டொகிக் சீன வீராங்கனை செங்ஜீ ஆகியோரும் அடங்குவர் மேலும் பலர் எதிர்வரும் நாட்களில் கையெழுத்திடவுள்ளனர். ஆண்கள் பிரிவில் ஸ்பானியாவின் கார்லோஸ் மோயா, ஜுவான் கார்லோஸ் பெரெய்ரோ ஜேர்மனியின் ரெய்னர் ஷுட்லர், ரஸ்யாவின் மராட்சாபின் ஆர்ஜெரீனாவின் டேவிட் நல்பாண்டியன் ஆகியோர் தற்போதைக்கு கையெழுத்திட்டுள்ளனர். இந்தச் சுற்றுப் போட்டி செப்ரெம்பர் 10 முதல் 26 வரை நடைபெறவுள்ளது.

ஆறு முறை GRAND SLAMS வென்ற 22வயதான செரினா சீனமக்களின் முன் விளையாடுவது ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவமாக இருக்கும் என்கிறார். உயர்தர வரிசையில் உள்ள நான் இளையோருக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். சீன இளைஞர், யுவதிகளுக்கு இது ஒரு ஊக்குவிப்பைக் கொடுக்கும். மேலும் நான் இதனை மிகுந்த கனதியான சுற்றுப் போட்டியாகவே எடுத்திருக்கிறேன் என்கிறார். 17 வயது மட்டுமே நிறைந்த ஷரபோவா சீன ஓபன் வெற்றிக் கிண்ணத்தை வழங்கப் போகிறவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், முதன் முறையிலேயே அதனைப் பெறப்போவது நானாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்கிறார்.

சீனா விளையாட்டுத்துறையில் உலகளாவிய முதன்மையான நாடுகளில் ஒன்று. மேலும் ஆசியக் கிரிக்கெட் சபையில் அங்கத்துவம் பெற்றதும் சீனாவைப் பொறுத்து வெற்றிகரமானது. அதோடு 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளையும் மனதிற் கொண்டு சீனப் பெருந்தேசம் உலகின் முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுத் துறைகளை தன் நாட்டில் மெருகுபடுத்த முனைகின்றது. போலத் தெரிகின்றது. சீன நாடு தொட்டதெல்லாம் பொன்னாகும் என்பது நிச்சயம்.



பறக்கும் நாகம்"யார் அழகு ரெனிஸ் மங்கையா? நீயா?"

# காலம் கரைந்து கொண்டிருக்கின்றது

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வதென்பது மாபெரும் சாதனை. அதனை 2000ஆம் ஆண்டு சிட்னியில் இலங்கைக்காகச் சாதித்துக் காட்டியவர் சுசந்திகா இதோ 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளும் நெருங்கி விட்டன. இந்த முறை இலங்கைக்கு ஒரு பதக்கம் கொண்டு வருவதாயின் அது சுசந்திகாவினால் மட்டுமே முடியும். அதனால்தான் அவரின் பிரதான நிகழ்வான 200 மீற்றர் ஓட்ட முன்னேற்றங்கள் பற்றி எல்லோரும் அதிக அக்கறையாக இருக்கின்றார்கள். அந்த வகையில் கொழும்பில் நடைபெற்ற ஏசியன் கிரோண் பிரி நிகழ்ச்சியில் எதிர்பார்க்கப்பட் 23.17 செக்கன்களில் ஒடி முடிக்க அவரால் முடியவில்லை. அவரால் 23.38 செக்கன்களிலே ஓட முடிந்தது. அதுவும் உஸ்பெகிஸ்தானின் பெரெரிலோவ் லுபோ ஓடிய அதே நேரத்திலேயே ஓடி முடித்தார். இருந்தாலும் சுசந்திகா முதலிடம் பெற்றார்.

ஆனால் தொடர்ந்து வந்த மணிலா கிரோண் பிரியில் லுபோ 23.8 செக்கன்களில் ஓடி வெற்றி பெற 23.17 செக்கன்களுடன் மூன்றாம் இடமே பெற முடிந்தது. ஆனாலும் இவர் எடுத்த 23.24 செக்கன்கள் முன்னேற்றகரமானது. இருந்தாலும் சுசந்திகாவால் ஏதென்சில் சாதிக்க முடியுமா என்பது தான் இப்போதுள்ள வினா? இருந்தாலும் சுசந்திகாவின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த இன்னும் சந்தர்ப்பங்கள் உண்டு



சுசந்திகா "தளர்ந்து விடாதே"

ஐரோப்பாவில் எதிர் வரும் நாட்களில் நடைபெறவுள்ள ஒரு சில தடகளப் போட்டிகளில் சுசந்திகா பங்கு கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டிகள் சுசந்திகாவின் வேகத்தை அதிகரிக்க உதவும் என்றே நம்பப்படுகிறது. சுசந்திகா மனத்தைரியமும் பிடிவாதமும் கொண்ட ஒரு வீராங்கனை. இவரது 200 மீற்றர் ஓட்டத்திற்கான சாதனை நேரம் 22.28 செக்கன்கள் எனவே தொடர்ந்து வரும் நாட்களில் மீண்டும் பழைய சுகுதியைப் பெற்று சுசந்திகா ஏதென்ஸ் போட்டிகளில் கலந்து கொண்டு தன்னை நிரூபிக்க வேண்டும் என்பதே ரசிகர்களின் விருப்பமாகும்.

-மரியா-



அரங்கம் "தங்கம் நிறைந்த பசுமை"

## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. நட்வெஸ்ட் ஒரு நாள் கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடு எது?
02. முரளிதரனின் சாதனையை சமப்படுத்திய அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர் யார்?
03. 2004 விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் சம்பியன் யார்?

**விளையாட்டுப் புதிர் 17**

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:.......................................................

முகவரி:.......................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 29.07.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**விளையாட்டுப் புதிர் இல. 16 இன் விடை**


01. கிரீஸ்

விலாசம்: விளையாட்டுப் புதிர்-இல.17
நமது ஈழநாடு. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர் :து.விதூஷன்
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# வானவில்லா? கானல் நீரா?



மொறிஸ் கிறீன் "இந்த ஓட்டம் போதுமா"

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அதிககவர்ச்சிகர நிகழ்வுகள் 100 மீற்றர் ஆண்கள், பெண்கள் குறுந்தூர ஓட்டங்களாகும். பெண்களைப் பொறுத்து மரியன் ஜோன்ஸ் ஏதென்ஸில் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்த்திருக்க துரதிஷ்டவசமாக இந்த நிகழ்வில் பங்குகொள்ளும் தகுதியையே இழந்துவிட்டார்.

ஆண்களைப் பொறுத்து மூன்று முறை உலகசம்பியன் பட்டம் வென்ற அமெரிக்கரான மொறிஸ் கிறீன், சிறப்பாக சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றவர். இவர் இந்தமுறை ஏதென்சில் மீண்டும் 100 மீற்றர் தங்கத்தை வெல்வாரா என்ற சந்தேகம் இருந்தது. ஏனெனில் கடந்த இரண்டு வருடங்களாக உபாதைகள், காயங்களால் துன்பப்பட்டார். சில போட்டிகளில் தோல்வியும் கண்டார்.

ஆனால், அதிமுக்கியமான ஏதென்ஸ் ஒலிம்பிக் தெரிவுப்போட்டியில் 9.91 செக்கனில் 100 மீற்றர் ஓட்டத்தைப் பூர்த்தி செய்து வெற்றிவாகை சூடியுள்ளார். இவரை அடுத்து ஜஸ்ரின் கெட்லின், ஷோன் குரோபோட் இருவரும் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர். ஆனால், 9.78 செக்கன்களில் 100 மீற்றர் ஓடி உலகசாதனையைத் தன்வசம் வைத்துள்ள ரிம் மொன்ட்கொமரி 10.13 செக்கனில் ஓடி, ஏழாவது இடத்தையே பெறமுடிந்தது. மீண்டும் எழுவேன் என்று அவர் கூறினாலும் அதனால் தற்போதைக்கு ஏதும் பயன் ஏற்படப்போவதில்லை.

ரசிகர்கள் என்காலம் முடிந்தது என்றுதான் கருதினார்கள். அப்படியில்லை, நான் மீண்டும் வந்துவிட்டேன் என்று நிரூபித்துள்ளேன் என்கிறார். மறுவளமாக கிறீன் இன்னொன்றையும் வலியுறுத்துகிறார் அவர். 2002 பாரிஸ் உலகப் போட்டிகளில் மொன்ட்கொமரி 9.78 செக்கன்களில் 100 மீற்றர் சாதனை படைத்தார். அதனை முறியடிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். அது என்னால் முடியும் என்கிறார். இதேவேளை கெட்லின் மற்றும் குரோபோட் இருவரும் இலேசில் விட்டுக்கொடுக்கக் கூடியவர்கள் அல்ல என்பதை அவர்களது தன்னம்பிக்கைமிக்க பேச்சு தெளிவாக்குகிறது. குரோபோட் கருத்துக் கூறுகையில் நாங்கள் முதல்தரமான மூன்றுபேர் இருக்கிறோம் என்பது உண்மை. ஆனால், நான் மிகுந்த பிரயத்தனம் எடுப்பேன் தங்கம் வெல்ல என்கிறார். உலகின் அதிவேகமான பெண்மணியார்? அதிவேக ஆண்யார்? ஊகிப்பது இனிக் கஷ்டம்தான்.

-பிரியா-





ஜஸ்ரின் கெட்லின் "வேகம் இன்னும் வேணுமா"

## பெண்கள் விழிப்புணர்வு

# "பெண்களின் குரலும் ஊர்களின் எழுச்சியும்"

பெண்களுக்கு உரியதாகவும், எம் தேசத்தை மாற்றியமைப்பதற்காகவும் ஒட்டுமொத்தக் கிராமிய மேம்பாட்டுப் பணியில் மாதர்சங்கங்களை இணைத்தற்பொருட்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கோட்டங்களிலும் உள்ள மாதர் சங்கங்களும், பெண்கள் பண்பாட்டு மையமும், விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ்.மாவட்ட அரசியற்துறையும் இணைந்து யூலை 11,12 ஆம் திகதிகளில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடம், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமப் பிரதேச சபை மண்டபம் ஆகிய இடங்களில் சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

இதன்போது, 97 மாதர் சங்கங்



களைச் சேர்ந்த 193 பெண்கள் கலந்து கொண்டு பெண்களின் முன்னேற்றமும் கிராமத்தின் முன்னேற்றமும் தொடர்பாக கோட்ட ரீதியாகக் காணப்படும் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

அக வணக்கத்தின் பின்னர் அரங்கப் பாடலுடன் ஆரம்பித்து மன இறுக்கம் தளர்த்தப்பட்ட நிலையில் உற்சாகமாக நடைபெற்ற சந்திப்பில் பின்வரும் சாதகமான அம்சங்கள் மேற்கிளம்பின.

- ♦ஆர்வத்துடன் பங்குபற்றியமை.
- ♦பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு முன்வைத்தமை.
- ♦பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் மட்டுமன்றி ஒட்டுமொத்த கிராமிய மேம்பாட்டிற்கு தடையான பிரச்சினைகளையும் முன்வைத்தமை.

**இதில் பெண்களின் பங்களிப்பு திருப்தியாக இருந்தது. தொடர்ந்தும் சங்கங்களின் ஆதரவைக் கோரி கிராம அபிவிருத்தியில் பெண்களும் பங்குவகித்து தங்கள் தோள்களில் தங்கள் கிராமத்தைத் தாங்கும் போது அவர்களோடு பெண்கள் பண்பாட்டு மையமும் பக்கத்துணையாக நிற்கும் எனவும் உறுதி கூறினார்.**

- ♦இதற்காக பல பெண்கள் தயார் மனநிலை கொண்டிருந்தமை.
- ♦சில மாதர் சங்கங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவையாக, சாதனைகளை நிலைநாட்டியவையாக உள்ளமை என்பவையாகும்.

இவர்களால் இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகள்.

1. உயர் பாதுகாப்பு வலயம், இயல்பு வாழ்வுக்குப் பெரும் தடையாக உள்ளமை.
2. காணாமற் போனோர் பிரச்சினை.
3. குடி நீர்பிரச்சினை.
4. மலசலகூட வசதியின்மை.
5. வீதி புனரமைப்பு.
6. பாலங்கள் திருத்தியமைக்காமை
7. மின்சார வசதியின்மை.
8. வடிகாற் பிரச்சினை.
9. குளங்கள் புனரமைப்பு.
10. போக்குவரத்துப் பஸ் சேவைப் பற்றாக்குறை.
11. நகர, கிராம சுத்திகரிப்பு வேலை சீரின்மை.
12. வலுவிழந்தோர் பிரச்சினை
13. மருத்துவம் தொடர்பானவை.
   - ♦வைத்தியர் பற்றாக்குறை
   - ♦வைத்தியசாலை புனரமைக்கப்படாமை.
   - ♦மருந்து வகைகள் பற்றாக்குறை
   - ♦குளிரூட்டிகள் இன்மை.
14. பெண்கள் தொடர்பானவை
   - ♦பெண் தலைமைக் குடும்பங்களுக்கு போதிய ஊக்குவிப்பின்மை.
   - ♦சுயதொழில் வாய்ப்புப் போதாமை.
   - ♦திறன் பயிற்சிகள் வழங்கப் படாமை.
   - ♦தனித்து வாழும் பெண்களுக்கான பாதுகாப்பின்மை.
15. கல்வி தொடர்பானவை
   - ♦ஆசிரியர் பற்றாக்குறை
   - ♦பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்படாமை
   - ♦பாடசாலைத் தளபாடப் பற்றாக்குறை
   - ♦நூலகம் இன்மை
   - ♦கணினிக் கல்வி பல பாடசாலைகளுக்கு இன்னும் அறிமுகம் செய்யப்படாமை.
   - ♦முன்பள்ளி, கல்வியில் தளபாடப் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை, ஊதியம் போதாமை, ஊதியம் வழங்கப்படாமை.
16. படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பின்மை.
17. படிப்பை இடையில் நிறுத்திய இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப் புக்கள், தொழிற் பயிற்சிகள் அற்று காலத்தை வீணே கழிக்கின்றமை.
18. தீய பழக்கவழக்கங்கள் சலாசார சீரழிவு தொடர்பான பிரச்சினைகள்
19. மயானப் புனரமைப்பு
20. கண்ணிவெடிப் பிரதேசமென அபிவிருத்தித் திட்டங்களில் விலக்கி விடுதல்.
21. மீளக் குடியமர்வு நிதி வழங்குவதில் குறைபாடு.
22. உ.அட்டை தொடர்பான பிரச்சினை
23. பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி (Leadership Trai ning) வலுப்படுத்தற் பயிற்சிகள் (Capacity Building) போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் இவர்களால் இனங் காணப்பட்டன.

இப்பிரச்சினைகளைப் பற்றி இவர்கள் கூறும்போது பல விடயங்களை மனம் திறந்து பேசினர்.

### குறிப்பாக ஒரு மாதர் சங்கத் தலைவி

- ♦அடுப்படி வரைக்கும் கருத்துக்கள் போகவேணும், அடுப்படியில் இருந்தும் கருத்து உருவாகவேணும்.
- ♦பெண்களும் கருத்துக்களை உருவாக்குபவர்களாக வரவேணும்.
- ♦அப்படியென்றால் கருவிலேயே அவர்கள் பிள்ளைகளுக்கு நல்ல கருத்துக்கள் போய்ச்சேரும்.
- ♦ஒவ்வொரு வீடும் சுதந்திரம் பெற வேணும்.
- ♦ஒவ்வொரு வீட்டிலும் வறுமை ஒழியவேண்டும்.
- ♦அப்படி நடந்தால் பொதுச் சேவை செய்ய முன்வருவர்.
- ♦மாதர் சங்கங்கள் உற்சாகமாய் இயங்கினால்தான் நாட்டை முன்னேற்றலாம் என்று தெளிவுடன் தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

பல மாதர் சங்கங்களைச் சேர்ந்த பெண்கள், மற்றைய சங்கங்கள் ஆற்றிய பணிகள் பற்றி கலந்துரையாடும் போது,

அவர்களுக்கு இலட்சக்கணக்கில் பண உதவிகள் வழங்கப்பட்டும் தமது சங்கங்களுக்கு எதுவித உதவியும் வழங்கப்படாமை குறித்து வருத்தம் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக மக்கள் இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட்டு பயத்துடன் வாழ்ந்து உடமைகளை இழந்து உறவுகளை இழந்து தன்னம்பிக்கை இழந்து பெருத்த மனித அவலத்துக்கு உட்பட்டுள்ளனர். இதன் மூலம் மக்களின் சுயகௌரவத்தை அழித்து சுயமுயற்சிக்கும், நிலையான வளர்ச்சிக்கும் இடம் தராமல் அதிகாரிகள் சில சலுகைகளை கொடுக்கமுன்வந்தனர்.

அது இரண்டு வழிகளில் நடந்துள்ளது.

ஒன்று அரசின் முகவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களால், மந்திரிமாராலும் மற்றது வெளிநாட்டு நிறுவனங்களாலும் ஆகும்.

இவர்கள் அங்கங்கு கிள்ளித் தெளித்தனர். இதன் காரணமாக மக்கள் கையேந்தும் முடிவுக்கு (Receiving End) தள்ளப்பட்டுள்ளனர். அதுமட்டுமல்ல இதைப் பெற்றுக் கொள்ளும் மக்களிடையே முரண்பாடுகளும், போட்டிகளும் உருவாக்கப்பட்டன.

இந்த விஷ சூழல் இருந்து நாம் வெளிவரவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி 50 லட்சம் பெருந்தொகைக் காசு அல்ல. மக்களை இதே மனநிலையில் வைத்துக் கொண்டு கிள்ளித்தெளித்தால் அது மக்களிடையே முரண்பாட்டை வளர்ப்பதற்குதான் வழிவகுக்கும்.

அண்மையில் 'பல்லசுட்டிக்' கிராமத்துக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடியபோது வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த மக்கள் சிலருக்கு வழங்கப்பட்ட பாத்திரங்கள் அந்த ஊரில் முரண்பாட்டை ஏற்படுத்தியிருந்ததை காண முடிந்தது. அந்தப் பாத்திரப் பகிர்வில் என்ன நடைமுறையை அதிகாரிகள் பின் பற்றியிருந்தார்கள் என்பது பற்றி மக்களுக்குத் தெரியாது. பாத்திரம் வழங்கப்பட்டவர்களை விட மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் அங்கு இருந்தனர். இவ்வாறு ஒற்றுமையாக இருந்த மக்களை குழப்பும் வகையில் சம்பவங்கள் இடம்பெற்றன.

மக்களிடையே ஒன்று திரண்ட பலம் இருக்கவேண்டிய நேரத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக் கூடாது. நாம் இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும். மாதர் சங்கங்கள் தாமே தமது கிராமப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் தலைமைத்துவம் நிறைந்ததாக வலுப்படுத்தப்பட வேண்டும். வீடு வீடாகச் சென்று கதைத்து இளம் பெண்களைத் திரட்டுபவர்களாக உயிர் ஊக்குநர்களாக இளம் பெண்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். பின்னர் இவர்கள் மற்ற இளம் பெண்களை அணிதிரட்டி பயிற்சியில் ஈடுபடுத்தவேண்டும. இவ்வாறு


**மக்களிடையே ஒன்று திரண்ட பலம் இருக்க வேண்டிய நேரத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக் கூடாது. நாம் இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும். மாதர் சங்கங்கள் தாமே தமது கிராமப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் தலைமைத்துவம் நிறைந்ததாக வலுப்படுத்தப்பட வேண்டும். வீடு வீடாகச் சென்று கதைத்து இளம் பெண்களைத் திரட்டுபவர்களாக உயிர் ஊக்குநர்களாக இளம் பெண்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும்.**

அனைத்து கிராம பெண்களும் விழிப்புப் பெறவேண்டும். தங்களுடைய ஆற்றலை உணரவேண்டும். இவர்களுக்காக கிராமத்தின் மத்தியில் சுயதொழில் நிறுவனங்களை உருவாக்கலாம். இதற்கான நிதி ஆதரவுகளைப் பெற முயற்சிக்கலாம். நாம் பலம்பெற்று இயங்குகின்றபோது அதற்கு நிதி ஆதரவு கிடைப்பதும் இலகுவாக இருக்கும். இதற்கு அர்ப்பணிப்புடன் உழைப்பதுதான் முக்கியமானது.

இதன்மூலம் கிராமத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களும் உழைப்பாளிகளாகி கிராமத்தின் வறுமையை ஒழிக்கமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் -

கிராமங்களில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பெண்



கள் வாயிலாக அறிதல்.

மாதர் சங்கங்கள் ஊடாக சிபார்சுகளை பெறுதல்.

கிராமிய அபிவிருத்தியில் மாதர் சங்கங்களை இணைத்தல்.

என்பவற்றுக்காக ஏற்படுத்தப் பட்டது எனவும்,

இதில் பெண்களின் பங்களிப்பு திருப்தியாக இருந்தது. தொடர்ந்தும் சங்கங்களின் ஆதரவைக் கோரி கிராம அபிவிருத்தியில் பெண்களும் பங்குவகித்து தங்கள் தோள்களில் தங்கள் கிராமத்தைத் தாங்கும் போது அவர்களோடு பெண்கள் பண்பாட்டு மையமும் பக்கத்துணையாக நிற்கும் எனவும் உறுதி கூறினார்.

### நெடுந்தீவு பிரச்சினை பற்றிப் பேசும் போது

குடிநீர் நெடுந்தீவு மேற்குப் பகுதியில் இருந்து கிழக்கு - மத்தி ஆகியவற்றுக்கு வழங்கப்படுவதாகவும் படையினர், ஈ.பி.டி.பி யினர் 24 மணித்தியாலமும் அந்நீரைப் பெறக் கூடியதாக இருக்க, தமது 45 குடும்பங்களில் 15 குடும்பங்களே ஒருவருக்கு ஒரு குடம் வீதம் நீரைப் பெறக்கூடியதாக இருப்பதாகக் கூறினர்.

கடல் போக்குவரத்து மட்டுப் படுத்தபட்ட அளவில் நடைபெறும் போது பொதுமக்களுடன் படையினரும் பயணம் செய்வதால் பொது மக்கள் சில சமயங்களில் இடப்பற்றாக்குறை காரணமாகப் பயணிக்க முடியாமலும் போகின்றது. அத்துடன் பெண்கள் இத்தகைய பயணங்களில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் - எனக் குறிப்பிட்டனர்.

### தென்மராட்சியைச் சேர்ந்த பெண் ஒருவர்

அ.உ.அட்டைகள் செய்த துரோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

உ.மட்டைகளுக்கு ரூபா 25000 மீளக் குடியமர்வு நிதி ஒதுக்கப் படாமை பற்றிச் சொன்னார்.

குண்டுகளும் ஷெல்களும் 'உ'அட்டை 'அ' அட்டைபார்த்து விழவில்லை, இந்த அநீதியை எப்படியும் தீர்த்து வைக்கவேணும் என்று கோரிக்கை விடுத்தார்.

***எனினும் கவலையான விடயங்களையும் அங்கு அவதானிக்க முடிந்தது***

இவற்றுள்

பல மாதர் சங்கங்கள் சரியாக இயங்காமல் உள்ளமை,

பெண்கள் பொது விடயங்களுக்கு முன்வராமை, பயம், வெட்கம், தயக்கம், நிறைந்தவர்களாக பெண்கள் இருத்தல், தங்கிவாழும் மனோபாவம் போன்றவை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலைமையை உள் வாங்கி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிதம்பரநாதன் உரை நிகழ்த்தியிருந்தார்.

*இந்த முழுக்கூட்டமும் பற்றி யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழியின் பிரதிபலிப்பு, பெண்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய விழிப்புணர்வு இயக்கத்தின் தேவையையும், இந்த இயக்கத்தில் பெண்கள் பண்பாட்டு மையம் வகிக்கவேண்டிய பெரும் பங்கையும் வலியுறுத்தியது.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விடுதலைப்புலிகள் தொடர்பான அமெரிக்க பார்வை மாறவேண்டும்....

அமெரிக்க தூதரகஅரசியல் அதிகாரியான கோடி.சி. ரெய்லர் அம்மையார் நேற்றுமுன்தினம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாளுமன்ற உறுப்பினர்களை யாழப்பாணத்தில் உள்ள கூட்டமைப்பினரின் அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திய போது, கூட்டமைப்பு உறுப்பினர்கள் அவரிடம் நீங்கள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லையா? என்று கேட்டபோது அதற்கு அந்த அம்மையார் அவர்கள் தடைசெய்யப்பட்ட இயக்கம் அதனால் அவர்களுடன் பேசமுடியாது என்றாராம்.

உடனே கூட்டமைப்பினர் அந்த அம்மையாருக்கு தெளிவாக ஒரு பதிலை கொடுத்துள்ளார்கள். விடுதலைப்புலிகளுடன் நீங்கள் பேசுதல் சாத்தியமில்லையெனில் எங்களுடன் பேசுவதும் தவறானதேயாகும் எனக்கூறிய கூட்டமைப்பினர், தாங்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படுவதுடன், அவர்களின் செயற்பாடுகளை ஆதரித்தும், அதற்குப் பக்கபலமாக நின்றும் செயற்படுகிறேம். எனவே- நாங்களும், அவர்களும இலட்சியத்தில் ஒரு நோக்குடன் செயற்படுபவர்கள் என்று அவருக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்

இது சரியான விளக்கம் தான், சரியான நேரத்தில் சொல்ல வேண்டியவருக்கு சொல்லப்பட்டுள்ளது

இலங்கையரசும், இந்திய, அமெரிக்க அரசுகளும் சரி விடுதலைபுலிகள் வேறு தமிழ்மக்கள் வேறு என்ற கருத்தை வலியுறுத்தும வகையில் அல்லது நியாயப்படுத்தும் வகையிலேயே இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே

கொழும்பிலிருந்து செயற்படும் அரசசார்பு தமிழக் குழுக்களின தலைமைகள் அவர்களுக்கு வளைந்து கொடுத்து தமது சுயநல அரசியல் அபிலாஷைகளை பெற்றுக்கொள்வதில், தமிழ் தேசியத்திற்கு எதிரான- விடுதலைப்புலிகளுக்கு எதிரான- அவர்களின் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதால் இந்தத் தமிழ்க் குழுக்களை ஜனநாயக நீரோட்டத்தில் இயைந்த நபர்களாக சர்வதேசத்திற்கு இனங்காட்டமுனையும் போது மேற்குறிப்பிட்ட பேரினவாத- மேலாதிக்க அரசுகளுக்கு அவர்கள் எடுபிடிகளாக மாறிவிடுவது தெரிந்ததே

இந்தக்குழுக்களை ஜனநாயக வாதிகளாக்கி, அவர்களுடன் தமது அபிலாஷைகளை எட்டுவதற்காக அரசியல் பேரம்பேசும் தமிழின எதிர்ப்பு மேலாதிக்க சக்திகளுக்கு, கொள்கை மற்றும் இலட்சிய பற்றுக கொண்ட விடுதலைப்புலிகள பயங்கரவாதிகளாக தெரிவதில் வியப்பில்லை

வல்லாதிக்க பேரினவாத சக்திகளின் ஜனநாயக பார்வை அப்படிப்பட்டதேயாகும்.ஆனாலும், அவர்கள் தங்கள் பக்க தவறுகளை நியாயப்படுத்த முனையும் போது தான் அவர்களின் ஜனநாயகத் தன்மை குறித்த நமது பார்வைக்கும் சந்தேகம் ஏற்படுகின்றது.

விடுதலைப்புலிகள் அமெரிக்காவினால் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருக்கலாம். ஆனால் இன்று சமாதான சூழலில் இலங்கை அரசின் சமாதான விரோத- புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு எதிரான சகல நடவடிக்கைகளையும் பொறுத்துக் கொண்டு அரச பயங்கரவாதத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காது, அமைதி முயற்சிக்கு சகல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கி சர்வதேச சமூகத்தின் நன்மதிப்புக்கு இலக்காகி விடுதலைப்புலிகளுடன் அமெரிக்கா தமது நியாயமற்ற தடையை காரணம் காட்டி பேசமறுப்பது நியாயமற்ற மற்றொரு செயலேயாகும்.

பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்னெடுக்கப்படும் தீர்வு முயற்சிகளுக்கு அமெரிக்கா மனப்பூர்வமாக, உள்நோக்கம் ஏதுமின்றி ஆதரவளிக்கின்றதென்றால், பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட ஒரு சாராருடன்- அதாவது அரசுடன் மட்டுமே பேசி தனது கருத்துக்களை வெளியிடுமென்றால் அது பக்கச் சார்பானதாகவே இருக்கும். அத்தகைய கருத்துக்களால் சமாதான முன்னெடுப்புக்களுக்கு எந்தவிதமான ஆதரவையும் வழங்க முடியாதென்பதே அரசியல் யதார்த்தமாகும். விடுதலைப் புலிகளுடன் அமெரிக்கா சமாதான முன்னெடுப்பின் அடிப்படையில ஏனைய அனைத்து பிரச்சினைகளையும் புறந்தள்ளிவிட்டு பேசுவதன் மூலமே பிரச்சினையில் ஆழ மூலங்களை அறிந்து கொண்டு ஒரு சரியானதும், நியாயமானதுமான நிலைப்பாட்டை எடுக்கமுடியும்.

அத்தகைய ஒரு நிலைப்பாடு மட்டுமே சமாதான பேச்சுக்களை மீண்டும் வெற்றிகரமாக முன்னெடுக்க உதவுவதாக இருக்கும். ஆனால், அமெரிக்காவின் ஜனநாயகம் அத்தகைய புரிந்துணர்வுடனும், நியாயத்தன்மையுடனும் பிரச்சினைகளை அணுகுமா என்பது சந்தேகம் தான்.

அமெரிக்காவின் இலங்கை விவகாரம் தொடர்பான அண்மைக்காலம் வரையான அணுகுமுறைகள் யாவும் பேரினவாதிகளுக்கு உற்சாகமும் நம்பிக்கையுமூட்டும் வண்ணமே அமைந்துள்ளன.

சமாதானம் தொடர்பான பக்கச் சார்பு கண்ணோட்டத்திலிருந்து அமெரிக்கா எள்ளவும் மாறியதாகத் தெரியவில்லை. பேரினவாதிகள் சமாதானத்தை சுயநல உள்நோக்குடன் இழுத்தடிப்பதற்கும் அதுவே காரணம்.

## நாடும் நடப்பும்




# ஊடக உரிமைச் சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றில்!

## கூட்டு எதிர்க்கட்சிகள் அறிவிப்பு

தகவல்களை சுயாதீனமாக அறிந்து கொள்ளும் உரிமையினை வலியுறுத்தும் சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கூட்டு எதிர்க் கட்சிகள் அறிவித்துள்ளன.

கூட்டு எதிர்க் கட்சிகளின் கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற போதே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தகவல்களை சுதந்திரமாக அறிந்து கொள்ளும் உரிமையின் அடிப்படையில் அரசாங்க ஊடகங்களான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏரிக்கரை பத்திரிகை நிறுவனம் என்பவற்றில் மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை கூட்டு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் படி இந்த மூன்று அரச ஊடகங்களுக்கும் மூன்று அத்தியட்சகர்களை ஊடக அமைச்சர் நியமிக்க வேண்டுமெனவும், மேலும் நான்கு பேரை அரசியலமைப்பு நிர்ணயசபை நியமிக்க வேண்டுமெனவும் கூட்டு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இந்த யோசனை முதலில் பொதுமக்களின் முன் கொண்டு செல்லப்பட்ட பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் கூட்டு எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

# அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள்

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்களை அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இதுவரை திறைசேரி முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான விண்ணப்பங்களைப் பிரித்தெடுக்கும் பணியில் தகுதியானவர்களைத் தெரிந்தெடுக்கும் பணிகள் நேற்று முன்தினம் முதல் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

திறைசேரி முகாமைத்துவ திணைக்கள ஊழியர்களைவிட, மேலதிக ஊழியர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களைத் தெரிவு செய்யும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டதும், கணினி மயப்படுத்தப்படும் பொருட்டு அவை கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதன்படி வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் செயற்பாடுகள் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என முகாமைத்துவப் பிரிவு உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், இதுவரை 5 ஆயிரம் பட்டதாரிகளுக்கு சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளும் படிவங்கள் அஞ்சலிடப்பட்டதாகவும், எதிர்வரும் வாரத்துக்குள் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் அதரிவித்தார்.

# சிறைச்சாலை சம்பவத்துடன் அதிகாரிக்கு தொடர்பிருந்தால் அதி உச்ச தண்டனை!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நிகழ்ந்த சம்பவங்களுக்கு அங்குள்ள உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டிருப்பது பற்றி விசாரணைகளின் போது தெரிய வந்தால், அந்த அதிகாரிகளுக்கு எதிராக அதி உச்ச தண்டனை வழங்கப்படும் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நூம் மர்சூக் தெரிவித்தார்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கூட ஆயுதங்களைப் பாவிக்க முடியாத நிலையில், சிறைச்சாலையினுள்ளே ஆயுதங்கள் கிடைத்திருப்பது அங்குள்ள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன்தானா என்பது குறித்து முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த சிறைச்சாலை ஆணையாளர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். சிறைச்சாலையிலிருந்து சந்தேகநபருக்கு, பிஸ்ரல், கைக்குண்டுகள் 2, கையடக்கத் தொலைபேசி, சயனைட் வில்லைகள் என்பன எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து ஆராய விசாரணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு அதில் வெளியாகும் சம்பவங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அதி உச்ச தண்டனை வழங்குவதற்கு நீதி அமைச்சு, தனக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# ஒரு விருப்பு வாக்கைக் கூட பெறாத வேட்பாளர்!

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் மூன்று கட்சிகளைச் சேர்ந்த இருபது வேட்பாளர்கள் தலா இருபதிற்கும் குறைந்த விருப்பு வாக்குகளையே பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த இருபது வேட்பாளர்களில் அதிகூடிய வாக்கைப் பெற்றவர் 16 விருப்பு வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளதாகவும், 2 வேட்பாளர்கள் தலா 3 விருப்பு வாக்குகளைக் பெற்றுள்ளதாகவும், 8 வேட்பாளர்கள் தலா 2 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும், 7 வேட்பாளர்கள் தலா 1 விருப்புவாக்கைப் பெற்றுள்ளதாகவும், சுயேட்சைக் குழு ஒன்றின் வேட்பாளர் ஒருவர் ஒரு விருப்பு வாக்கைக் கூட பெறவில்லை எனவும் தேர்தல் திணைக்களத்தின் புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

கண்டி மாவட்டத்தில் மொத்தம் 895.305 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளதும், ஒவ்வொரு வாக்காளரும மூன்று விருப்பு வாக்குகள் அளிக்கமுடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் 53.95 சதவீதமான வாக்குகள் மாத்திரமே பதிவாகியிருந்தமை தெரிந்ததே.

# மட்டுவில் வடக்குக்கு விரைவில் மின்சாரம்


மட்டுவில் வடக்குப் பகுதிக்கு மின்னிணைப்பு மேற்கொள்வதற்கான முன்முயற்சிகள் மின்சாரசபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நுணாவில் கனகன்புளியடி வீதி, கனகன்புளியடி- புத்தூர் வீதி ஆகியவற்றில் மின்கம்பங்கள் நடுவதற்கான குழிகள் தோண்டப்பட்டு வருகின்றன. தென்மராட்சிப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்கி ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னும் பல கிராமங்கள் மின்னொளி கிடைக்காத நிலையிலேயே உள்ளன. யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மட்டுவில் வடக்கு, சரசாலை, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், கல்வயல் போன்ற கிராமங்களும் இவற்றிலடங்கும். மேலும் காலதாமதம் செய்யாது இப்பகுதிகளுக்கான மின் விநியோகத்தை மேற்கொள்வதோடு வீதி விளக்குகளும் அமைக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (24)

சர்வதேச புலனாய்வு அரசியல் - வன்கூவரிலிருந்து ரிஷி

# மீண்டும் அமெரிக்காவுக்குத் தலைவலி

இந்தத் தொழில்நுட்பத்தை Priority Feachesing என்று சொல்வார்கள். அதன்படி தரையிலுள்ள



Jamming Equipment எந்தவகை சற்றலைற்றிலிருந்து வரும் எந்த வகை சிக்னல்கள் முக்கியமானவை என வரிசைப்படுத்தி Programme செய்ய வேண்டும்.

உதாரணமாக ரஷ்யாவின் தலைநகரிலுள்ள இராணுவ முக்கியத்துவம் உடைய பிரதேசம் ஒன்றை வானில் உள்ள சற்றலைற்றுக்கள் தங்களது Reaching Range க்குள் வைத்திருக்கின்றன என வைத்துக் கொள்ளுங்கள். அதில் ஒன்று ரஷ்ய சற்றலைத் மற்றொன்று தனியார் தொலைத் தொடர்புச் சற்றலைற், இரண்டு அமெரிக்க சற்றலைற் மற்றவை முறையே பிரிட்டிஷ் சற்றலைற் மற்றும் ஜேர்மன் சற்றலைற் என வைத்துக் கொண்டால ரஷ்யாவில் தரையில் இருக்கும். Signal Jamming Equipment இல் அதன் Jamming விடயத்தில் எந்த சற்றலைற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள், இரண்டாவது முக்கியத்துவம் உடைய சற்றலைற் எதுவென வரிசைப் படுத்தி Programme பண்ணமுடியும்.

அதேபோல், ஒவ்வொரு சற்றலைற்றிலிருந்தும் தனக்குவரும் பல வகையான Signalகளில் எந்த Signal களுக்கு முதற் Priority எதற்கு இரண்டாவது Priority என்று வரிசைப்படுத்த முடியும். உதாரணமாக சற்றலைற்றில் இருந்து வரும் ஒரு குறித்த வகை Signal Remote Control மூலம் தரையில் உள்ள கருவி ஒன்றை இயக்க முடியும் என்றால், அந்தவகைச் Signal இற்கு முதல் வகைப் Priority கொடுப்பார்கள்.




தரையைப் புகைப்படம் எடுக்கக் கூடிய Signal க்கு 2 ஆவது Priority 2 ஆம், கால நிலையை Monitor பண்ணும் Signal க்கு மிகக்குறைந்த Priority 2ம் கொடுக்கப்படும்.

இப்படி வரிசைப்படுத்தி Programme செய்த பின்னர் இவர்கள் கொடுத்த முக்கியத்துவதற்கு ஏற்ப தரையில் உள்ள சற்றலைற் Jamming Equipment இயங்கத் தொடங்கும்.

உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நிமிடத்தில் அமெரிக்க சற்றலைற்றிலிருந்து Remote Control இயக்கக்கூடிய Signal 2 உம் அதே British சற்றலைறறில் இருந்து காலநிலையை Monitor பண்ணக் கூடிய Signal 2 ஆம் தரைக்கு வந்தால், தரையிலுள்ள Jammig Equipment Programme பண்ணியபடி British சற்றலைற்றை விட்டு விட்டு அமெரிக்க சற்றலைற் பக்கமாகத் திரும்பி, அங்கிருந்து வரும் Signal களை முதல் Jame பண்ணத் தொடங்கும். இதுதான். Priority Section தொழில்நுட்பம்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது, இது ஒரு அருமையான பாதுகாப்புக் கொடுப்பது போல் தோன்றும். ஆனால், இந்தத் தொழில்நுட்பத்தை ஏமாற்றவும் முடியும்.

அதுவும் அமெரிக்கா போன்ற நாட்டால் அச்சார்த்தகமாக ஏமாற்ற முடியும்.



Stealth VRCD

இந்த ஏமாற்றும் செயலைச் சொல்வது di verstion of signal tran smissions என்று அதைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் சற்ற லைட்டுக்களிலிருந்து வரும் வேறுபட்ட signal களை எந்த என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். signal monitoring divise கள் signal களை இரு விதங்களில் வேறு படுத்துகின்றன.

ஒன்று frequency.

மற்றையது sensity.

இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கும் signal jamming Equipment பயன்படுத்துவது, sensity of the signal அதாவது signal களின் அடர்த்தி யின் அளவை வைத்துத்தான் signal எவ்வகையான signal எனக் கணக்கெடுக்கிறது.

தரையில் இருககும் Equipment ஒரு குறிப்பிட்ட தரை இலக்கை கண்வைத்திருக்கும் சற்றுலைற்கள் இருந்தால் அவை இரண்டும் வெவ்வேறு திசையில் இருந்து தரையில் ஒரு குறிப்பிட்ட திசை யைப் பார்க்கும் படி வானத்தில் position பண்ணப்பட்டிருப்பதாகும். உதாரணமான ஒரு நடைமுறை வழமையாக மொஸ்கோவில் ஒரு குறிபபிட்ட இராணுவத் தளத்தை கண்காணிக்கும் இரு அமெரிக்க சற்றலைற்றுக்களில் ஒனறு 21- n position மற்றது 18 -n position இலும் இருந்து அதில் 21 -n உள்ள சற்றலைற் மூலம் தரையில் உள்ள remote control ஐ இயக்க signal transit பண்ண வேண்டும் என வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த signal 15.32.00 என்ற நேரத்தில் transit பண்ணும்படி comman அதற்கு நான்கு அல்லது 5 செக்கன்களுக்கு முன்னர் 15.32.55 ற்கு 18 -f உள்ள சற்றலைற்றில் higher sity signal களை அனுப்பத் தொடங்கும் அந்த signal களை தரையை அடையும் நேரத்தில் தரையிலுள்ள கருவியில் signal messaging unite பண்ணி jammig deveive ஐ 18 - உள்ள சற்றலைற்றின் பக்கமாகத் திருப்பி signal ஐ jammig பண்ணத் தொடங்க சுமார் நான்கில் இருந்து ஐந்து செக்கன்கள் எடுக்கும்.

இந்த அவகாசம் மத்திய சற்றலைற்றுக்குப் போதுமானது. 21-n position இல் உள்ள சற்றலைற் நிஜமான signal களைத் தரையில் உள்ள remote control க்கு transit பண்ணிவரும்.

முதலாவது கிடைத்த singa face signal என்று jamming devise புரிந்து கொண்டு அடுத்த signal ஐ நோக்கித் திரும்பும் முன்னே இரண்டாவது signal செய்ய வேண்டிய காலத்தை கச்சிதமாக முடிந்து விடும். இதுதான் diversion of signal transmision.

(தொடரும்)


நாடாளுமன்ற நடைமுறைகள் - வல்லையூரான்

# நாடாளுமன்றம் பற்றி அதிகமானோர் அறியாத சுவையான தகவல்கள் சில...

**(நேற்றைய தொடர்ச்சி...)**

**நாடாளுமன்ற விவாத அறிக்கை (ஹன்சாட்) ஆரம்பமாகியது எப்படி?**

நாடாளுமன்றத்தின் அனைத்து உரைகளிலும் அறிக்கை வடிவில்



'ஹன்சாட்' என்ற பெயரில் வெளியிடப படுவது பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இது 1300 ஆம் ஆண்டளவில் பிரித்தானியரால் ஆரம்பிக்கப் பட்டது.

அந்தக்காலத்தில் நாடாளுமன்றத்தில் உரையாடப்படுகின்ற விடயங்களை பொதுமக்களுக்கு தெரிவிக்கவேண்டிய சந்தர்ப்பம் இருக்கவில்லை. ஆகையால், பிரித்தானிய நாடாளுமன்றத்தினுள் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தின் உரைகள் பத்திரிகைகளுக்குத் தருவதற்கு சுருக்கெழுத்துத் தெரிந்த ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் குறிப்பெடுத்துக் கொண்டார். அவரது பெயர்தான் 'ஹான்சாட்' அன்றிலிருந்துதான் நாடாளுமன்றத்தின் பேச்சுக்கள் அறிக்கையாவது ஹான்சாட்டிற்கு செல்கிறது என்பதாகக் கூறப்பட்டது.

**ஊடகவியலாளர்கள் உட்காரும் மேற்தட்டு (GALLERY) சபாநாயகருக்குப் பின்புறமாக அமைக்கப்பட்டது ஏன்?**

உலகத்தின் அதிக நாடாளுமன்றங்களில் ஊடகவியலாளர்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள மேற்தட்டு அமைக்கப்பட்டுள்ளது. சபாநாயகருக்குப் பின்புறம் அதன் முதல் நிகழ்வின் பின்னணியை அமைத்து பிரித்தானியாவின் முன்னாள் சபாநாயகர் ஒருவருக்கு பத்திரிகையைக் காட்ட முடியாததன் காரணத்தினாலேயே,

இந்த சபாநாயகர் எப்பொழுதுமே பத்திரிகைகளோடு சச்சரவுகள் செய்துகொண்ட ஒருவர் எப்படியோ பிற்காலத்தில் பத்திரிகையாளர்களுக்கு நாடாளுமன்றத்திற்கு வரக்கூடியவிதமாக பிரேரணை ஏற்றக்கொள்ளப்பட்ட பிறகு அவருக்கு அதற்கு அனுமதி வழங்கநேர்ந்தது. ஆயினும், அவருக்கு பத்திரிகையாளர்களைக் காணப்பிடிக்காதென்பதால் அவர் பத்திரிகையாளர்களுக்கு ஆசனங்களை ஒதுக்கியது தனக்கு அவர்களைத் தெரியாதவிதமாக தனக்குப் பின்பக்கத்திலேயே அது சம்பிரதாயமாக உலகம்பூராவும் பரவியதாகச் சொல்லப்படுகின்றது.

**நாடாளுமன்றம் கூடுவதுபற்றி தெரிவிக்கும் முறை**

நாடாளுமன்றம் கூடும் நாளில் அங்கு பிரதான கொடிக்கம்பத்தில் தேசியக் கொடி ஏற்றுவது வழமை. இது மாலை 6 மணிக்கு கீழே இறக்கப்படும். ஏதோ ஒரு காரணத்தினால் இதன் பின்னர் கூட்டம் நடைபெறுமானால் கொடிக்கம்பத்தில் நீலநிற மின்சாரக்குமிழ் தெரியவிடப்படும்.

**நாடாளுமன்றம் கூடுகின்ற நாட்களைத்தவிர வேறு எப்போது அதனைக் கூட்டமுடியும்.**

சாதாரணமாக நாடாளுமன்றம் கூடுகின்ற நாட்களைத்தவிர, நாடாளுமன்றக் கூட்டம் கூட்டக்கூடிய விசேட சந்தர்ப்பங்கள் இரண்டு இருக்கின்றன. ஒரு சந்தர்ப்பம்தான் வெளிநாட்டு அரச தலைவர் ஒருவர் இந்த நாட்டிற்கு வந்து நாடாளுமன்றத்துக்கு வருகை தரும சந்தர்ப்பம். அடுத்ததுதான் நாட்டின் ஜனாதிபதி இறந்துபோகும் சந்தர்ப்பம்.

ஜனாதிபதி இறந்துபோகும் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் நாடாளுமன்றத்தைக் கூட்டி ஜனாதிபதி இறந்து போன சம்பவத்தைத் தெரிவித்து, அதன் பொருட்டு பிரதமர் வேலைகளை நடத்துவார் என்பதையும், புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட வேண்டிய நாளையும் தெரியப்படுத்த வேண்டும். இது ஜனாதிபதி இறந்து 48 மணிநேரத்திற்குள் நடைபெற வேண்டும்.

ஏதோ ஒரு காரணத்தினால் ஜனாதிபதியும் பிரதமரும் இருவரும் ஒரே தடவையில் இறந்துபோனால் சபாநாயகர் இரண்டுமாதகாலம் ஜனாதிபதி பதவியிலிருந்து பொறுப்புக்களைக் கவனிக்கமுடியும். பிரதமரால் ஒரு மாதகாலம்தான் அதனைச் செய்யமுடியும்.


**நாடாளுமன்றத்தில் ஆசனங்கள் எடுக்கும் சம்பிரதாயம்**

நாடாளுமன்றத்தில் ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளது சபாநாயகருக்கு வலப்பக்கமாவும், இடப்பக்கமாகவும், சாதாரணமாக வலப்பக்கமாக அரச கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுவதோடு இடதுபக்க ஆசனங்கள் எதிர்க் கட்சிக்கு ஒதுக்கப்படும்.

அரசாங்கக் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் முகத்தை முகம் நோக்கும் விதத்தில் ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கக்கட்சியின் முன்வரிசையில் 8 ஆவது ஆசனம் பிரதமருக்கு ஆசனம் ஒதுக்கப்படுவதோடு இடதுபக்க ஆசனவரிசையில் 8 ஆவது ஆசனம் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்குக் காரணம்தான் பிரதமர் நட்சத்திர மண்டலத்தில் முக்கிய நட்சத்திரமாக வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளல்.



ஆகையால், அவரை மத்தியில் உட்கார வைத்துள்ளார்கள். இதன் பிறகு அரசாங்கக் கட்சியின் அமைச்சர்களுக்கு அவர்களுக்கு உரிய பக்கத்தில் முன் ஆசனங்கள் ஒதுக்கப்படுவதோடு, கட்சித்தலைவர்களுக்கும் கௌரவம் காண்பிக்கப்படும். அதற்கடுத்து மூப்புரிமை கவனத்தில் எடுக்கப்படும்.


எதிர்க்கட்சிப்பக்கத்தில் என்றால் முன்னாள் பிரதமர், சபாநாயகர்கள், அமைச்சர்கள் ஆகியோர்பற்றி வரிசைக்கிரமமாக கவனத்திற்கொண்டுதான் ஆசனங்கள் ஒதுக்குவதில் முக்கியத்துவம் தரப்படும்.

அத்தோடு, கட்சித் தலைவர்களுக்கும் ஆசன ஒதுக்கீட்டில் முன் வரிசை ஆசனங்கள் வழங்கப்படும். இந்தவிதமாக நாடாளுமன்றத்தினுள் 232 ஆசனங்கள் உள்ளன. 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் தற்பொழுது உள்ளனர். தேவைப் பட்டால் 275 வரை ஆசனங்களின் தொகையை அதி கரித்துக்கொள்ள முடியும்.

(முற்றும்)

# ஈராக்கிய நீதியமைச்சரின் வாகனம் மீது பாக்தாத்தில் கார்க் குண்டுத் தாக்குதல்!

## அமைச்சர் காயமின்றி உயிர்தப்பினார்.



(பாக்தாத்)

பாக்தாத்தின் மேற்குப் பகுதியில், ஈராக்கின் இடைக்கால அரசின் நீதியமைச்சரை இலக்குவைத்து நடத்திய தாக்குதலில், நீதியமைச்சர் எதுவித காயங்களுமின்றி உயிர் தப்பிய அதேவேளை, அவரது நான்கு மெய்ப் பாதுகாவலர்கள் உயிரிழந்தனர்.

மேற்குப் பாக்தாத்தில் அமைந்துள்ள தனது வீட்டிலிருந்து அமைச்சர் தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்தவேளை, அங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து இந்தக் கார்க் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலை அடுத்து, அமைச்சரின் வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

ஈராக்கிற்கான இடைக்கால அதிகார சபை கையளிக்கப்பட்டவேளை நடத்தப்பட்ட கார்க் குண்டுத்தாக்குதலில் பத்துப்பேர் கொல்லப்பட்டபின், இந்தவாரம் நடந்த மிகப்பெரிய தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிய உயர்அதிகாரிகள் மீது மீளவும் கிளர்ச்சிவாதிகள் தாக்குதலை ஆரம்பித்து விட்டமையையே இந்தத் தாக்குதல் சம்பவம் உணாத்தியுள்ளது.

இதேவேளை, ஈராக்கின் தென் பகுதியில் - ஈராக் படையினரின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட மற்றொரு கார்க் குண்டுத் தாக்குதலில் இருவர் பலியானதுடன், 22 பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட இருவரும் ஈராக்கின் தேசிய பாதுகாப்புப் படையினரெனவும், காயமடைந்தவர்கள் ஈராக்கிய படைக்கு ஆட்சேர்க்கும் வகையில் நடைபெற்றுக்கொண்டிருந்த நேர்முகத் தேர்விற்காகக் காத்திருந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.





# வை.கோ மீதான பொடா வழக்கை விசாரிக்கத் தடை மேலும் நீடிப்பு

## உயர் நீதிமன்றம் உத்தரவு

(புதுடெல்கி)

வைகோ மீதான பொடா வழக்கை விசாரிப்பதற்கான தடையை நீடித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உட்பட 9 பேர் 2002 ஆம் ஆண்டு ஜுலை 11 ஆம திகதி பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது பூந்தமல்லி பொடாநீதிமன்றில் விசாரணை நடைபெற்றுவருகிறது. கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி வைகோவை பிணையில் விடுதலை செய்து, சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. மற்றவர்களும், அதற்கு முன்பாக பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதற்கிடையில் மத்திய பொடா ஆய்வுக்குழு வைகோ மற்றும் 8 பேர்மீது பொடா வழக்குத் தொடர்வதற்கான முகாந்திரம் இல்லை எனறு தீர்ப்பளித்தது.

அதைத்தொடர்ந்து தங்கள் மீதான பொடா வழக்கை மாநில அரசு வாபஸ் பெறவேண்டுமென்று அவர்கள் சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். பொடா மறு ஆய்வுக்குழுவின் தீர்ப்பை மேல்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டாலும், வழகக்கு விசாரணைக்குத் தடைவிதிக்க மறுத்துவிட்டது. அதை எதிர்த்து



உயர் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் வைகோ உள்ளிட்ட 9 பேர் மீதான பொடா வழகக்கு விசாரணைக்கு கடந்த மே 7 ஆம் திகதி உயர் நீதிமன்றம் தடைவிதித்தது. இந்த வழக்கை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என்.வரியவா, அரிஜித் பசாயத் ஆகியோர் முன்-நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. மறு உத்தரவு வரும்வரை அவர்கள் மீதான பொடா வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை நீடித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# ஜென்கின்ஸை ஒப்படைக்க கோருவதை அமெரிக்கா பிற்போட்டுள்ளதாம்

அமெரிக்க இராணுவத்திலிருந்து தபபியோடி வடகொரியாவில் வசித்து வரும் சார்லஸ் ஜென்கின்ஸ் தற்போது ஜப்பானுக்கு மருததுவச் சிகிச்சைக்காகச் செல்லவுள்ளார். இவரைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென ஜப்பானிடம் கோருவதனை பிற்போட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அவரது உடல் நிலையைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் ஹோவாட் பாக்கர், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் யொறிகோ கவாகுச்சியை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவரது உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதென ஜப்பான் வெளியுறவு அமைச்சர் கவாகுச்சி தன்னிடம் தெரிவித்தாக அமெரிக்கத் தூதுவர் பாக்கர் தெரிவித்தார்.

அத்துடன் ஜென்கின்ஸின் உடல் நிலை குறித்து அமெரிக்கா, மனிதாபிமான முறையில் அணுகவேண்டுமென ஜப்பான் வெளியுறவு அமைச்சர் பாக்கரிடம் கேட்டுள்ளார்.

இதற்கு- ஜென்கின்ஸின் உடல் நிலை குறித்து அமெரிக்கா அனுதாபப்படுவதாகவும், இவரது மருத்துவ சிகிச்சை முடியும்வரை இவரை எம்மிடம் ஒப்படைக்கக் கோருவதை ஒத்திவைக்கவுள்ளதாகவும் பாக்கர் பதிலளித்துள்ளார்.


# மலிவு ! மலிவு ! மலிவு !

எமது நிறுவனத்தின் 46 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மலிவு விற்பனை எதிர்வரும் (திங்கட்கிழமை) 19 - 07 - 2004 தொடக்கம் 20 - 08 2004 வரை அனைவருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும். இந்திய வெளியீடுகளுக்கு மூன்று மடங்கும் 20% கழிவும் வழங்கப்படும். பிறநாட்டு வெளியீடுகளுக்கு 20% கழிவு வழங்கப்படும். பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில் நுட்பக்கல்லூரி, கல்வியியற்கல்லூரி, பொதுநிறுவனங்கள், நூலகங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன் இலவச விநியோகம் செய்து கொடுக்கப்படும். பாடசாலைகளுக்கான தரமான உள்ளீட்டு பொருட்கள், மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள் ஆகியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம் -

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 2225542

(சி/2768)


# சிறைச்சாலையில் வெள்ளம் கைதிகள் தப்பியோட்டம்

பீகாரில் தர்பங்கா மாவட்டச் சிறைச்சாலையில் வெள்ளநீர் புகுந்ததால் அதைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் உட்பட 34 கைதிகள் சிறையிலிருந்து கடந்த புதன்கிழமை நீந்தித் தப்பினர்.

சிறையின் தரைத் தளத்தில் வெள்ள நீர்புகுந்ததால் கைதிகளை மேல் தளத்துக்குக் கொண்டுசெல்ல முடிவுசெய்யப்பட்டது. சிறையின் சுற்றுச்சுவர் உயரத்துக்கு வெள்ளநீர் ஓடியதால் இதைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் உட்பட 34 கைதிகள் வெள்ளநீரில் நீந்தித் தப்பினர்.

இதே போன்று கடந்த வியாழக்கிழமையும் சில கைதிகள் சிறையிலிருந்து தப்பமுயன்றனர். சிறையின் மேற்தளத்தில் ஓட்டைபோட்டு தப்பமுயன்றதை பொலிஸார் பார்த்து விட்டனர்.

இதனால் கோபமுற்ற கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொலிஸார் வானைநோக்கித் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்ததை அடுத்து சிறையில் சகஜநிலை திரும்பியது.





பெரிய கிளிஇன வகையைச்சேர்ந்த காகபோ எனப்படும் இந்தப் பறவை மிகவும் அபூர்வமானது. ஒக்லாந்து, நியூஸிலாந்து போன்ற நாடுகளில் மொத்தமே 86 பறவைகள்தான் உள்ளன. தற்போது இதில் 19 பறவைகளுக்கு வைரஸ் நோய் தொற்றியுள்ளது. இவற்றில் 3 பறவைகள் கடந்த வாரம் செத்துவிட்டன். மீதமுள்ள 16 பறவைகள் ஒக்லாந்தில் உள்ள மருத்துவ மனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றன.

# ரொனி பிளேயரின் கட்சி இடைத் தேர்தலில் தோல்வி

ஈராக் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்பட்டதற்காகவும், இராணுவத்தை அனுப்பியதற்காகவும் இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரின் செல்வாக்குச் சரிந்த நிலையில் இருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்தின் 2எம்.பி தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

இதில் லீசஸ்டர் சவுத் தொகுதியில், ரொனிபிளேயரின் தொழிலாளர் கட்சி படுதோல்வி அடைந்தது. ஜனநாயக மைனாரிட்டி கட்சி அமோக வெற்றி பெற்றது.

ஹெட்ஜ் ஹில் தொகுதியில், ஆளும் தொழிலாளர் கட்சி மிகக் குறைந்தவாக்கு வித்தியாசத்திலேயே வெற்றிபெற முடிந்தது. அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என்றும் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.


# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004 - 07 - 22 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

## பணிநிலை - வரி அறவீட்டாளர்

தகைமைகள் - 1. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
2. அகவை 18 - 35 குள் இருத்தல் வேண்டும்.

## நேர்முகத் தேர்வு நடைபெறும்

நாள் - 2004-07-22
நேரம் - காலை 10.00 மணி
இடம் - 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு - நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதரல் வேண்டும்.
1. கல்விச் சான்றிதழ்,
2. தே.அ.அட்டை
3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4.மேலதிக தகைமைச் சான்றுகள்

ஆளுகை,
சந்தைப்பகுதி, யாழ்.மாவட்டம்

(785)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 200 ஏக்கர் விவசாய நிலங்களை தென்மராட்சியில் படையினர் ஒப்படைப்பு

தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து கடந்த வருடம் படையினரால் கையளிக்கப்பட்ட விவசாய நிலங்களின் தொடர்ச்சியாக மேலும் 200 ஏக்கர் விவசாய நிலங்களை படையினர் நேற்றுக் கையளித்தனர்.

இந்தக் கையளிப்பு வைபவம் நேற்று நுணாவில் வைரவர் கோவிலுக்கு அருகாமையில், வயல் நிலங்களை ஊடறுத்து அமைக்கப்பட்ட பாதைக்கு அண்மையில் படையினரால் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கையளிப்பு நிகழ்வில் அரச அதிபர் செ.பத்மநாதன், வீடமைப்பு அதிகாரசபை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சாம்பசிவம், கமநலசேவை விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன், தென்மராட்சி பிரதேச செயலர் சிறினிவாசன், மிதிவெடி செயற்பாட்டு அதிகாரி ராங்கோ, நுணாவில், மறவன் புலவு கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய சம்மேளனத் தலைவர்கள் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

படைத்தரப்பில் 52ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன, தென்மராட்சி மக்கள் தொடர்பகப் படை அதிகாரி மேஜர் லக்ஷ்மன் குணசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.



படையினரால் கையளிக்கப்பட்ட பிரதேசத்திற்கான வரைபடம் அடங்கிய ஆவணத்தை படையதிகாரி பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன, அரச அதிபர் செ.பத்மநாதனிடம் நேற்றுப் பகல் 11.45 மணியளவில் கையளித்தார்.

தென்மராட்சியில் புகையிரத நிலைய வீதிக்கு வடக்குப் புறமாகவும், யாழ்ப்பாணம் கேரதீவுக்குத் தெற்குப்புறமாகவும் உள்ளபகுதியே நேற்றுக் கையளிக்கப்பட்டது.

கையளிப்பு நிகழ்வின் பின்னர் அரச அதிபர் பத்மநாதன் படையதிகாரி திஸ்ஸ ஜெயவர்த்தன, விவசாயிகள் சார்பில் வ.சின்னப்பு ஆகியோர் உரையாற்றினர். (29)

# துளித்துளி வைரங்கள் நேற்று வெளியிடப்பட்டது




'துளித்துளி வைரங்கள்' நூல் வெளியீட்டு விழா நேற்று தெல்லிப்பழை பல நோக்குகூட்டுறவு சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் யாழ். பல நோக்கு கூட்டுறவுச சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நேற்று பி.ப. 3.30 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ்மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். வரவேற்புரையினை ஆசிரியர் சங்கர்வாமன் நிகழ்த்தினார். வாழ்த்துரையினை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், யாழ்.பல நோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் சொலமன் சூ.சிறில், ஆசிரியர் ந. விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தினர். நூலுக்கான வெளியீட்டுரையினை யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்தினார்.

'துளித்துளி வைரங்கள்' நூலின் முதல் பிரதியினை யாழ்.மாவட்ட மாணவரமைப்புப் பொறுப்பாளர் சி. எழிலன்பன் பெற்றுக்கொண்டார். மதிப்பீட்டுரையை யப்பான் கச்சுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர் மனோன்மணி சண்முகதாஸ், கிளிநொச்சி தமிழ்ச் சங்கச் செயலாளர் ப.பரமநாதபிள்ளை, அ.தங்கவேலாயுதம் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் வங்கிப் பணியாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கவிஞர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றம் மீண்டும்...

போல் பெரும்பான்மைப்பலம் அவர்களிடம் இல்லை. 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த 20ஆம் திகதி நாடாளுமன்றில் அரசாங்கத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற கொள்ளவுள்ளனர்.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமல்ல அரசுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராவுள்ளனர்.

பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாக மீண்டும் மீண்டும் தெருவிக்கும்போது எதிர்க்கட்சியும் அரசின் நடவடிக்கைகளுடன் இணைந்து நாட்டுமக்களின் நன்மைக்காக செயற்படுவது அவசியமாகும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பிரதாயமாக எதிர்க்கட்சியென செயற்படுவதைவிட தேசியப்பிரச்சினையில் அரசுடன் இணைந்து நெருக்கமான முறையில் செயற்படவே எதிர்கட்சியின் பெரும்பானமை உறுப்பினர்கள் விரும்புகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## சிறப்புற...

ளர் சோ.தங்கன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழத் தேசியக்கொடியினை மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் ரமேஷ் ஏற்றிவைத்தார்.

மேஜர் முரளியின் உருவப்படத்திற்கு மாவீரர் கப்டன் கெனடியின் தந்தையும், இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தலைவருமான ம.பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா ஆகியோர் மலர்மாலை சூட்டினர். ஈகைச் சுடரினை மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் கௌசலயன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

நடுவர்கள் சார்பில் - ஜோயல் பியசீலன், வீரர்கள் சார்பில் அன்ரன் நிரோஜன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

இதையடுத்து - போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

# ஓயாத அலைகள் - 1 நடவடிக்கை 8 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று!

ஓயாத அலைகள் ஒன்று நடவடிக்கையின் 8 ஆம் ஆண்டு நிறைவு விழா முல்லைத்தீவில் பேரெழுச்சியுடன் இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் முல்லைத்தீவு பொது மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

முல்லை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பெருந்திணைக்கள சந்தியில் இருந்து ஆரம்பமாகும் பேரணி பொது மைதானத்தைச் சென்றடையும்.

பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி பாரம்பரிய கலை வடிவங்களான கரகம், காவடி, கும்மி, சிலம்பு, கோலாட்டம், குதிரையாட்டம், குடம் ஊதுதல் என்பன தவில், பறை, உடுக்கு போன்ற கருவிகளுடன் நகர்ந்து செல்லும்.

இப்பேரணியில் மாணவர்களும், பொதுமக்களும் பங்குகொள்வுள்ளனர். பேரணி பொதுமைதானத்தைச் சென்றடைந்ததும் அரங்க நிகழ்வுகள் நடைபெறும்.

அரங்க நிகழ்வுகளாக சங்கநாதம் பாடலும், ஆடலும், சிறப்புரைகள், பண்டாரவன்னியன் நாடகம், கடற்புலிகளின் மகளிர் அணியின் நாடகம், நாட்டிய நடனங்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை கடற்புலிகளும் முல்லை வாழ் மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

## மட்டு. - அம்பாறை....

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஜெயானந்தமூர்த்தி, கனகசபை, அரியேந்திரன், தங்கேஸ்வரி, பத்மநாதன், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, யோகாம்பிகை, விவேகானந்தன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியத்தை சீர்குலைப்பதற்காக தீயசக்திகள் பல்வேறு வழிகளில் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றன. காலம் காலமாக கிழக்கு மாகாணத்திலுள்ள சிலரைப் பயன்படுத்தி தமிழ்த்தேசியத்தை சிதைப்பதற்கு அரசுகள் செயற்பட்டு வந்துள்ளன.

பிரதேசவாதங்கள் முன்வைக்கப்பட்டன. எனவே தமிழ்த்தேசியத்தின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்ட நீங்களும், தமிழ்த் தேசியப்பற்றாளர்களும் தமிழ்த்தேசியத்தை வலுவூட்டும் வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும். மக்கள் மத்தியில் தொடர்ந்தும் தமிழ்த் தேசியம் தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்என்ற கருப்பொருளில் நேற்றைய சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக தெரியவருகிறது.

## இலங்கை விவகாரத்தில்...

சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நிறுவுவதில் ஏற்படும் தாமதம், கருணா விவகாரம் போன்றவற்றால் மீண்டும் போர் மூழும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவை இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிட வைக்கும் முயற்சியில் அரசு அதிக அக்கறை காட்டி வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - எதிர்வரும் 20 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸை அரசாங்கத்தில் இணைப்பதற்கு இந்தியாவின் அழுத்தத்தைப் பயன்படுத்துவதும் மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்தியாவின் அனுசரணையுடனேயே அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரும்புவதன் அடிப்படையிலேயே அந்த விடயத்தையும் பிரதமர் இந்திய அதிகாரிகளிடம் முன்வைக்கவுள்ளார். (01)

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு....

வன்முறைச் சம்பவங்களுக்கு இனந்தெரியாத குழு ஒன்று செயற்படுவதாக மக்கள் கருத்தை வெளிப்படுத்தினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நிலையில் தனது மட்டக்களப்பு விஜயம் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கும் அவர், யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

# மரண அறிவித்தல்

## கந்தையா பாலசிங்கம்

பூநகரியைப் பிறப்பிடமாகவும் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் அவர்கள் 14.07.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், நல்லதம்பி கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், அருணாசலம், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் சகோதரரும், முத்தம்மா, பொன்னையா, கந்தையா, இராசம்மா, இலட்சுமி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்ற ஜெகதாம்பிகை மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஜெயாநந்தி, ஜெயக்குமார்(ஜேர்மனி), ஜெயபாலன்(அமெரிக்கா) ஜெயதாசன் (உப - தலைவர், பட்டதாரிகள் சங்கம் யாழ்.மாவட்டம்) ஜெயப்பிரதா ஆகியோரின அருமைத் தந்தையுமாவார். உதயபாலி, தேவராசா, சண்முகப்பிரியா, செல்வாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீப்(ஜேர்மனி), அனுசியன்(ஜேர்மனி), சுதர்சன், சுலக்சன், சுதர்சினி, சுஜீதன், சேந்துர்யன், துளக்ஷிகா, கீர்த்திகா, ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.


அன்னாரின்இறுதிக் கிரிகைகள் இன்று (18.07.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அச்சக ஒழுங்கை,*
*தலையாழி கொக்குவில்.*

(789)

தகவல்:
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.